
பக்கங்கள் 19


# மாலை முரசு

முழக்கம்: 01 வள்ளுவ ஆண்டு 2054 கார்த்திகை 04 திங்கட்கிழமை 20.11.2023 அதிர்வு 112



## உலகக் கிண்ணம் வென்ற ஆஸ்திரேலிய அணிக்கு ரணில், மோடி வாழ்த்து!





2023ஆம் ஆண்டுக்கான உலகக் கிண்ணக் கிரிக்கெட் தொடரின் இறுதிப் 04

# பொலிஸ் தடுப்பில் இருந்து உயிரிழந்த சந்தேகநபரின் உடலில் அடிகாயங்கள்!

### இது இயற்கை மரணம் இல்லை என்கிறது சட்ட மருத்துவ அறிக்கை

- எஸ்.நிதர்ஷன் -

யாழ்ப்பாணம், வட்டுக்கோட்டை பொலிஸாரால் கைது செய்யப்பட்டு நீதிமன்றத்தின் உத்தரவில் தடுப்புக் காவலில் வைக்கப்பட்டிருந்த நிலையில் உயிரிழந்த சந்தேகநபரின் உடலில் அடிகாயங்களுடன் கூடிய சிராய்ப்புக் காயங்களும், கண்டல் காயங்களும் உள்ளன என்றும், 04



## கைதான இளைஞர் உயிரிழந்த விவகாரம்:

# வட்டுக்கோட்டை பொலிஸ் நிலையத்தின் பாதுகாப்பு நண்பகல் முதல் பலப்படுத்தல்

### இரு அதிகாரிகள் இடமாற்றம்; விசேட அதிரடிப் படையினரும் குவிப்பு



(எஸ்.நிதர்ஷன்)

யாழ்ப்பாணம், வட்டுக்கோட்டை பொலிஸ் நிலையப் பகுதியில் இன்று நண்பகல் முதல் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டுள்ளது.

அங்கு இரும்புப் பாதுகாப்பு வேலிகள் வீதியில் வைக்கப்பட்டுள்ளன. ஏனைய பொலிஸ் நிலையங்களில் இருந்தும் மேலதிகமாகப் பொலிஸார் வரவழைக்கப்பட்டுக் குவிக்கப்பட்டுள்ளனர். அங்கு பொலிஸ் விசேட அதிரடிப் படையினரும் ஆயுதங்களுடன் பாதுகாப்புக் கடமையில் ஈடுபட்டுள்ளனர். 04



## 3 மூடைகளில் கேரள கஞ்சா

### காரைநகரில் சிக்கியது

- ந.லோகதயாளன், எஸ்.நிதர்ஷன் -

யாழ்ப்பாணம், கரைநகர் பகுதியில் 3 மூடைகளில் மறைத்து வைத்திருந்த 101 கிலோ 750 கிராம் கேரள கஞ்சா கடற்படையினரால் கைப்பற்றப்பட்டுள்ளது.

காரைநகர் கடற்கரைப் பகுதியில் ஓர் இடத்தில் 3 மூடைகள் மறைத்து வைக்கப்பட்டுள்ளன என்று மீனவர் ஒருவர் வழங்கிய தகவலின் அடிப்படையில்

கடற்படையினர் இன்று அதிகாலை மேற்கொண்ட தேடுதலின்போதே இந்தக் கஞ்சா மூடைகள் மீட்கப்பட்டுள்ளன. 04

## நவாலியில் வயோதிபர் ஒருவர் மயங்கி வீழ்ந்து பரிதாபச் சாவு!

(எஸ்.நிதர்ஷன்)

யாழ்ப்பாணம், நவாலிப் பகுதியில் சைக்கிளில் சென்ற வயோதிபர் ஒருவர் மயங்கி வீழ்ந்து சாவடைந்துள்ளார். 04

### கழுத்தில் தங்க நகை அணியாத

## பெண்ணைத் தாக்கி விட்டு தப்பிச் சென்ற கொள்ளையர்

(எஸ்.நிதர்ஷன்)

வீதியில் நடந்து சென்ற பெண் சங்கிலி அணியாததால் அவரைத் தாக்கி விட்டு வீதியில் தள்ளி விட்டு முகமூடிக் கொள்ளைக் கும்பல் ஒன்று தப்பிச் சென்றுள்ளது. 04

## கொக்குத்தொடுவாய் மனிதப் புதைகுழி அகழ்வுப் பணி ஆரம்பம்



(விரிவான செய்தி 2ஆம் பக்கத்தில்)

உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்-Bonding Tamils Globally

# கொக்குத்தொடுவாய் மனிதப் புதைகுழி அகழ்வுப் பணி மீண்டும் இன்று ஆரம்பம்



- சண்முகம் தவசீலன் -

முல்லைத்தீவு – கொக்குத்தொடுவாய் மனிதப் புதைகுழியின் அகழ்வாய்வு நடவடிக்கை மீளவும் இன்று ஆரம்பிக்கப்பட்டது.

கொக்குத்தொடுவாய் மனிதப் புதைகுழியின் அகழ்வாய்வு நடவடிக்கை கடந்த செப்டெம்பர் மாதம் 6 ஆம் திகதி ஆரம்பிக்கப்பட்டு செப்டெம்பர் 15 ஆம் திகதி வரை இடம்பெற்றிருந்தது.

இதன்போது 17 மனித எலும்புக் கூட்டுத் தொகுதிகள் மீட்கப்பட்டிருந்தன. அத்துடன் துப்பாக்கிச் சன்னங்கள், விடுதலைப்புலிகள் அமைப்பினர் பயன்படுத்தும் இலக்கத் தகடு, உடைகள் உள்ளிட்ட சான்றுப் பொருட்களும் மீட்கப்பட்டிருந்தன.

அகழ்வுப் பணி இடைநிறுத்தி வைக்கப்பட்டிருந்த நிலையில், மீண்டும் அது ஆரம்பிக்கப்படுமா என்ற சந்தேகம் பல்வேறு தரப்பினரிடமும் நிலவிய நிலையில் மீண்டும் இன்று காலை 10 மணியளவில் அகழ்வுப் பணி ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

இந்த அகழ்வுப் பணி முல்லைத்தீவு நீதிமன்ற நீதிபதி தர்மலிங்கம் பிரதீபன் முன்னிலையில் முல்லைத்தீவு மாவட்ட சட்டவைத்திய அதிகாரி க.வாசுதேவ, தடயவியல் பொலிஸார், கிராம சேவையாளர் ஆகியோரின் பங்கேற்புடன் முன்னெடுக்கப்பட்டு வருகின்றது.

அகழ்வுப் பணி இடம்பெறுவதைப் பார்வையிட ஜனாதிபதியின் வடக்கு அபிவிருத்திக்குப் பொறுப்பான மேலதிக செயலாளர் எல். இளங்கோவன் இன்று வருகை தந்திருந்தார்.

அத்துடன் முல்லைத்தீவு மாவட்ட மேலதிக அரச அதிபர் க.கனகேஸ்வரன், ஜனாதிபதி சட்டத்தரணி எம்.ஏ.சுமந்திரன், காணாமல்போனோருக்கான அலுவலகத்தின் பணிப்பாளர் தற்பரன், சட்டத்தரணிகளான வி.கே.நிறஞ்சன், கு.ஆன்சுமங்கலா மற்றும் முன்னாள் வடக்கு மாகாண சபை உறுப்பினர் து.ரவிகரன் உள்ளிட்ட தரப்பினரும் அங்கு பிரசன்னமாகியிருந்தனர்.











# கைதான இந்திய மீனவர் 22 பேர் பின்கதவு உத்தரவில் விடுவிக்கப்பட்டமைக்கு மன்னார் மீனவர்கள் ஆட்சேபம்

## வடமாகான கடற்றொழிலாளர் இணையத்தின் செயலாளர் என்.எம்.ஆலம் சீற்றம்



(மன்னார் நிருபர்)

நல்லிணக்க அடிப்படையில் இந்திய மீனவர்கள் 22 பேரையும் விடுவிக்க ஜனாதிபதி உத்தரவிட்டிருந்தால் தென் பகுதியில் உள்ள எமது மீனவர்கள் இந்தியாவில் கைது செய்யப்பட்டு அங்கு சிறைகளில் வாடுகிறார்கள், அவர்களையும் விடுவிப்பதற்கு ஜனாதிபதி இனியாவது முயற்சி எடுக்க வேண்டும் – இப்படி வடமாகாண கடற்றொழிலாளர் இணையத்தின் செயலாளர் என்.எம்.ஆலம் தெரிவித்தார்.மன்னாரில் உள்ள அலுவலகத்தில் இன்று திங்கட்கிழமை மதியம் இடம்பெற்ற ஊடக சந்திப்பின் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் –

இலங்கைக் கடற்பரப்பில் அத்துமீறி நுழைந்து மீன் பிடியில் ஈடுபட்ட நிலையில் கடந்த வெள்ளிக்கிழமை இரவு யாழ்ப்பாணம் பருத்தித்துறை கடற்பரப்பில் வைத்து இலங்கை கடற்படையினரால் கைது செய்யப்பட்டு காங்கேசன்துறை கடற்படை முகாமிற்கு 2 இந்திய படகுகளுடன் 22 மீனவர்களும் கொண்டு செல்லப்பட்டனர்.

இந்த நிலையில் இந்திய நிதி அமைச்சர் அவர்களின் வேண்டுகோளுக்கு இணங்க, இலங்கை ஜனாதிபதி ரணில் விக்கிரம்சிங்கவின் பணிப்புரையின் கீழ் நல்லிணக்க அடிப்படையில் அவர்களை விடுவிக்க நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டது என்று கூறப்படுகின்றது.

இலங்கைக் கடற்பரப்பில் அத்துமீறி நுழைகின்ற இந்திய மீனவர்கள் கைது செய்யப்பட வேண்டும், அவர்களின் படகுகள் பறிமுதல் செய்யப்பட வேண்டும் என்ற சட்டத்தின் ஊடாக இப்பிரச்சினைக்குத் தீர்வை நாங்கள் வலியுறுத்தி இருக்கின்ற நிலையில் – இந்த சட்டம் அவ்வாறு நடைமுறையில் இருக்கும் நிலையில் – இலங்கைக் கடற்பரப்பில் சட்ட விரோதமாக நுழைந்து, இலங்கையில் தடை செய்யப்பட்ட தங்கூசி வலையை பயன்படுத்தி சட்டவிரோத மீன்பிடி நடவடிக்கையில் ஈடுபட்ட போது, இலங்கைக் கடற்படையால், இலங்கை கடற்பரப்பிற்குள் வைத்து இந்த இந்திய மீனவர்கள் 22 பேரும் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இந்த நிலையில் இந்த மீனவர்களை எவ்வாறு ஜனாதிபதி விடுவிக்க முடியும்.? அவ்வாறான அதிகாரம் அவருக்கு இருக்கின்றதா? – என்ற கேள்விகள் எழுகின்றன.

ஒரு சட்டத்தின் ஊடாக, வர்த்தமானி அறிவித்தலின் அடிப்படையில், சட்ட நடவடிக்கைகள் இடம் பெற்று வருகிறது. இந்த நிலையில் ஜனாதிபதி சட்டவிரோத செயற்பாட்டை செய்கிறவர்களை நீதி மன்றத்தில் முன்னிலைப்படுத்தாமல் அவர்களை வெறுமனே விடுவிக்க முடியுமா என்ற கேள்வியும் எழுகின்றது.

அவ்வாறு விடுவிக்கும் முடியும் என்றால் நாளை பிரதமருக்கு அல்லது கடற்றொழில் அமைச்சருக்கும் அவ்வாறு அதிகாரம் செய்யக்கூடிய வாய்ப்பு இருக்கின்றதா என்ற கேள்வியும் எழுகின்றது.

வடபகுதி மீனவர் – குறிப்பாக மன்னாரில் இருக்கும் மீனவர்கள் கிளிநொச்சி கடற்பரப்பில் வைத்து கைது செய்யப்பட்டு, அவர்கள் மாவட்டம் விட்டு மாவட்டம் தாண்டி மீன் பிடியில் ஈடுபடுகின்றனர் எனக் கூறி அவர்களுக்கு எதிராக நீதி மன்றத்தில் வழக்கு தாக்கல் செய்யப்பட்டு இன்று வரை விசாரணைகள் இடம் பெற்று வருகின்றன. இன்னும் அந்த வழக்குகள் நீதிமன்றத்தில் நிலுவையில் உள்ளன.

மாவட்டத்தில் இருந்து இன்னொரு மாவட்டத்தில் செல்வது கூட ஒரு தடுக்கப்பட்ட விடயமாக இருக்கும் போது நாடு விட்டு நாடு வந்து எமது கடற்பரப்பை சூறையாடி, சட்டவிரோத மீன்பிடியைச் செய்கிறவர்களை எவ்வாறு ஜனாதிபதி விடுவிக்கலாம்?

நாங்கள் தொடர்ச்சியாக இந்த போராட்டங்களை முன்னெடுக்கின்றோம். இந்திய மீனவர்களின் வருகையை நிறுத்துங்கள், அவர்களின் வருகையே இல்லாமல் ஆக்குங்கள் என்று போராடுகிறோம். அது செவிடன் காதில் ஊதிய சங்கு போல ஒருவர் காதிலும் விழவில்லை. எல்லா அரசியல் தலைவவர்களும் கைவிட்டு, ஜனாதிபதியே கண்டுகொள்ளாமல் இருக்கும் நிலையில் இந்திய மீனவர்கள் 22 பேருக்காகவும் வெறுமனே இந்தியாவில் உள்ள ஓர் அமைச்சர் கூறியதற்கு அமைவாகவும் உடனடியாக எவ்வித கால தாமதம் இன்றி, அந்த மீனவர்கள் விடுவிக்கப்படுவராக இருந்தால் கடந்த 15 வருடங்களாக நாங்கள் குரல் கொடுத்து, கத்தி வருகிறது எல்லாம் எதற்காக? இலங்கையில் இருக்கின்ற நாங்கள் எல்லாம் வெறும் மந்தைகளா?

வெறும் சத்தமிடும் தவளைகளாக மட்டுமே நாம் இருக்கிறோம் என்பதைத் தான் இன்று கூறக்கூடியதாக இருக்கிறது.

ஜனாதிபதி இந்திய மீனவர்கள் 22 பேரையும் விடுவித்தமை அவரின் நிலைப்பாடாக இருந்தால் எங்களால் சொல்லப்படுகின்ற விடயத்தையும் அல்லது எங்களால் முன்வைக்கப்படுகின்ற இலங்கையில் நாங்கள் முன்வைக்கின்ற மீனவர்கள் நலன் சார்ந்த விடயங்களையும் அவர் கவனத்தில் எடுக்க வேண்டும்.

வேறு நாட்டிற்காக இலங்கையின் சட்டத்தை விட்டுக் கொடுத்து செயல்படும் ஜனாதிபதி எங்கள் நாட்டில் சட்டத்தை நடைமுறைப்படுத்த கேட்டுக் கொண்டால் அதை செவி சாய்க்காமல் இருக்கின்றமை மீனவர்களுக்கு செய்யப்படுகின்ற ஒரு பெரிய துரோகம்.

நல்லிணக்கம் என்ற போர்வையில் இந்த மீனவர்கள் விடுவிக்கப்பட்டுள்ளனர். அதை ஏற்றுக் கொள்வதாக இருந்தால் இலங்கையில் இருந்து சென்றிருக்கின்ற எமது மீனவர்களின் படகுகள் – வட பகுதியைச் சேர்ந்த 10க்கும் மேற்பட்ட படகுகள் – அங்கு இருக் கின்றன. அவற்றை அவர்கள் நல்லிணக்க அடிப்படையில் விடுவிக்கக் கோரியிருக்க முடியும். அல்லது தென் பகுதியில் உள்ள எமது மீனவர்கள் இந்தியாவில் கைது செய்யப்பட்டு அங்கு சிறைகளில் வாடுகிறார்கள். அவர்களையும் விடுவிப்பதற்கு ஜனாதிபதி இனியாவது முயற்சி எடுக்க வேண்டும்.

நல்லிணக்கம் என்ற போர்வையில் ஒன்றை கை நீட்டி உள்ளார். அதற்கு இந்தியாவிடம் இலங்கை மாற்றீடாக கோரிக்கை விடுத்தால் அது செய்யுமா என்பதை இந்த வேலையில் நாங்கள் கேட்டுக்கொள்ளுகின்றோம். வெறுமனே ஒரு நாட்டிற்கு தாரை வார் ப்பதற்காக இந்தக் கடற்பரப்பு உள்ளது என்ற கேள்வி எழுகின்றது. – என அவர் மேலும் தெரிவித்தார்.

இதன் போது மன்னார் மாவட்ட மீனவ சமாசத்தின் தலைவர் மரியதாஸ் குரூஸ் கலந்துகொண்டு தனது கருத்தை முன்வைத்தார்.

# முதலாம் பக்கத் தொடர்ச்சிகள்

### 3 மூடைகளில்...

இவ்வாறு மீட்கப்பட்ட கஞ்சா மூடைகள் நீதிமன்றம் ஊடாக சட்ட நடவடிக்கைக்கு உட்படுத்தப்படவுள்ளது.

### ஆஸ்திரேலிய அணிக்கு...

போட்டியில் ஆஸ்திரேலிய அணியினர் வெற்றி பெற்றமைக்கு உலகத் தலைவர்கள் வாழ்த்துக்களைத் தெரிவித்துள்ளனர்.

இலங்கை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி உள்ளிட்ட பல தலைவர்கள் இந்த வாழ்த்துக்களைக் கூறியுள்ளனர்.

2023ஆம் ஆண்டுக்கான உலகக் கிண்ணக் கிரிக்கெட் தொடரின் இறுதிப் போட்டி நேற்று இடம்பெற்றது.

இந்தியாவின் அஹமதாபாத் – நரேந்திர மோடி சர்வதேச விளையாட்டரங்கில் நடைபெற்ற குறித்த போட்டியில் ஆஸ்திரேலிய அணியும், இந்திய அணியும் மோதின.

முதலில் துடுப்பெடுத்தாடிய இந்திய அணி நிர்ணயிக்கப்பட்ட 50 ஓவர்களில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 240 ஓட்டங்களைப் பெற்றுக்கொண்டது.

இந்தநிலையில், 241 ஓட்டங்கள் என்ற வெற்றி இலக்கை நோக்கி துடுப்பெடுத்தாடிய ஆஸ்திரேலிய அணி 43 ஓவர்கள் நிறைவில் 4 விக்கெட்டுக்களை மாத்திரம் இழந்து வெற்றி இலக்கை அடைந்தது.

இந்த வெற்றியுடன் ஆஸ்திரேலிய அணி 6ஆவது முறையாகவும் உலகக் கிண்ணத்தை வென்றுள்ளமை குறிப்பிடத்தக்கது.

### பெண்ணைத் தாக்கிவிட்டு...

யாழ்ப்பாணம் – சுழிபுரம் பகுதியில் நேற்று நடைபெற்ற இந்தச் சம்பவம் தொடர்பில் தெரியவருவதாவது,

வீட்டுக்கு அருகில் உள்ள ஆலயம் ஒன்றில் வழிபாட்டை முடித்துக்கொண்டு தனது வீடு நோக்கி அந்தப் பெண் நடந்து செல்கையில் அவரை மோட்டார் சைக்கிள் ஒன்றில் தங்கள் முகங்களை மறைத்து துணியால் கட்டியவாறு பின் தொடர்ந்த இருவர் பெண்ணின் கழுத்தில் கை வைத்துள்ளனர்.

அதன்போதே அந்தப் பெண் கழுத்தில் தங்க நகைகள் எதுவும் அணிந்திருக்கவில்லை எனத் தெரிந்து கொண்டதும் பெண்ணைத் தாக்கி விட்டு வீதியில் தள்ளி விழுத்தி விட்டு முகமூடிக் கொள்ளையர்கள் தமது மோட்டார் சைக்கிளில் தப்பிச் சென்றுள்ளனர்.

### நவாலியில்...

நவாலி சென்பீற்றர்ஸ் தேவாலயம் அருகில் உள்ள வீதியில் இன்று காலை அந்த வயோதிபர் உயிரிழந்துள்ளார்.

மானிப்பாய் பகுதியைச் சேர்ந்த 70 வயதான அருளப்பு விமலதாஸ் என்பவரே இவ்வாறு மரணமடைந்துள்ளார்.

சடலம் யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் பிரேத பரிசோதனைக்காக வைக்கப்பட்டுள்ளது.

இந்தச் சம்பவம் தொடர்பாக மானிப்பாய் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

### பொலிஸ் தடுப்பில்...

இது இயற்கையான நோயால் ஏற்பட்ட மரணம் அல்ல என்றும் சட்ட மருத்துவ அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இந்தக் காயங்கள் உயிரிழந்த சந்தேகநபரின் கைகளிலும், கால்களிலும், முதுகிலும், பின்பக்கத்திலும் உள்ளன என்றும் சட்ட மருத்துவ அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இறப்புக்கான காரணம் புலனாய்வு ஆய்வில் உள்ளது என்றும், அதேவேளை மேலதிக பகுப்பாய்வுக்காக உடலில் இருந்து மாதிரிகள் எடுக்கப்பட்டுள்ளன என்றும் சட்ட மருத்துவ அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

உயிரிழந்தவரின் சடலம் இன்று நண்பகல் உடற்கூற்றுப் பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்ட நிலையில் இந்த அறிக்கையிடப்பட்டுள்ளது.

மல்லாகம் நீதிவான் நீதிமன்றின் உத்தரவில் தடுப்புக் காவலில் வைக்கப்பட்டிருந்த சந்தேகநபரே நேற்று உயிரிழந்தார்.

சித்தங்கேணி, கலைவாணி வீதியைச் சேர்ந்த நாகராசா அலெக்ஸ் (வயது 25) என்ற இளைஞரே உயிரிழந்தார்.

சிகிச்சைக்காக யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் சேர்க்கப்பட்ட பின்னர் சந்தேகநபர் உயிரிழந்தார்.

உயிரிழந்தவர் உள்ளிட்ட இருவர் கடந்த வாரம் திருட்டுச் சம்பவம் தொடர்பில் வட்டுக்கோட்டைப் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர். சந்தேகநபர்கள் இருவரும் நான்கு நாள்களாக வட்டுக்கோட்டை பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைக்கப்படவும் இல்லை, விடுவிக்கப்படவும் இல்லை என்பதனால் உறவினர்கள் அச்சமடைந்திருந்தனர்.

இதையடுத்து உயிரிழந்த நபரின் தாயார் இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ்ப்பாணம் பிராந்திய அலுவலகத்தில் முறைப்பாடொன்றையும் பதிவு செய்திருந்தார். அதனால் சந்தேகநபர்கள் கடந்த 10ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை மல்லாகம் நீதிவான் நீதிமன்றில் முற்படுத்தப்பட்டிருந்தனர்.

பொலிஸாரின் ஆட்சேபனையடுத்து சந்தேகநபர்கள் இருவரும் கட்டுக் காவலில் வைக்கப்பட்டிருந்தனர்.

அதன்பின்னர் இருவரும் யாழ்ப்பாணம் சிறைச்சாலைக்கு அழைத்துச் செல்லப்பட்டனர். சிறைக்காவலரின் காவலுடன் மேற்படி சந்தேகநபர் சிகிச்சைக்காக யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் சேர்க்கப்பட்டார். இந்நிலையில், சிகிச்சை பயனின்றி அவர் நேற்று உயிரிழந்தார்.

உயிரிழந்தவரின் சடலம் உடற்கூறு பரிசோதனைக்காக யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனை சவ அறையில் வைக்கப்பட்டிருந்தது. உடற்கூற்றுப் பரிசோதனையின் பின்னரே உயிழப்புக்கான காரணம் வெளியிடப்பட்டுள்ளது.

### வட்டுக்கோட்டை பொலிஸ்...






பொலிஸ் நிலையத்தை முற்றுகையிட்டுப் போராட்டம் இடம்பெறலாம் என்று கிடைத்த தகவலின் பிரகாரம் பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

வட்டுக்கோட்டை பொலிஸாரால் கைது செய்யப்பட்ட சித்தங்கேணியைச் சேர்ந்த நாகராசா அலெக்ஸ் (வயது – 25) என்ற இளைஞர் யாழ்ப்பாணம் சிறைச்சாலையில், மல்லாகம் நீதிவான் நீதிமன்றின் உத்தரவில் தடுத்து வைக்கப்பட்டு இருந்த நிலையில் நேற்று வைத்தியசாலையில் உயிரிழந்துள்ளார்.

இளைஞரைப் பொலிஸார் கைது செய்து சித்திரவதைக்கு உட்படுத்தியதால்தான் அவர் உயிரிழந்தார் என உறவினர்கள் குற்றம் சாட்டி வரும் நிலையில், பொலிஸார் தன்னை எவ்வாறு சித்திரவதை செய்தனர் என்று வைத்தியசாலையில் மேற்படி இளைஞர் தெரிவித்திருந்த வீடியோ ஒன்றும் சமூக வலைத்தளங்களில் வைரலாகி உள்ளது.

இந்நிலையில், இளைஞரின் உறவினர்கள், நண்பர்களையும், ஊரவர்களையும் மற்றும் பொதுமக்களையும் திரட்டி பாரிய போராட்டம் ஒன்றைப் பொலிஸ் நிலையப் பகுதியில் முன்னெடுக்கவுள்ளனர் என்று பொலிஸாருக்குக் கிடைக்கப்பெற்ற இரகசியத் தகவலின் அடிப்படையிலையே பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டுள்ளது என்று பொலிஸ் தரப்பு தெரிவித்துள்ளது.

இதேவேளை, இளைஞர் உயிரிழந்த சம்பவம் தொடர்பில் யாழ்ப்பாணம் பிராந்திய மூத்த பொலிஸ் அத்தியட்சகர் தலைமையில் ஒரு விசாரணை முன்னெடுக்கப்பட்டுள்ளது. அந்த விசாரணைக்கு ஏதுவாக வட்டுக்கோட்டை பொலிஸ் நிலையத்தில் கடமையாற்றிய இரு பொலிஸ் உத்தியோகஸ்தர்கள் உடன் அமுலுக்கு வரும் வகையில் இடமாற்றம் செய்யப்பட்டுள்ளனர்.

அத்துடன், இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ்ப்பாணம் பிராந்திய அலுவலகத்தால் பிறிதாக ஒரு விசாரணையும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

# நாடாளுமன்ற உறுப்பினர்களின் ஒழுக்கம்; சட்டமூலம் விரைவில் சமர்ப்பிக்கப்படவுள்ளது!

## நீதி அமைச்சர் விஜயதாச ராஜபக்ஷ தெரிவிப்பு

நாடாளுமன்ற உறுப்பினர்களின் ஒழுக்கம் தொடர்பில் தேவையான நடவடிக்கைகளை எடுப்பதற்காக புதிய சட்டமூலமொன்றை நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கவுள்ளது என்று நீதி அமைச்சர் விஜயதாச ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

நாடாளுமன்ற உறுப்பினர் ஒருவர் தனது பதவியின் கௌரவத்தைப் பாதுகாக்காவிடின், அந்த உறுப்பினரின் உறுப்புரிமையை இரத்துச் செய்வதற்கு சட்டத்தில் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன என்று அவர் குறிப்பிட்டுள்ளார்.

கண்டி பிரதேசத்தில் ஊடகங்களுக்குக் கருத்து தெரிவித்த போது நீதியமைச்சர் விஜயதாச ராஜபக்ஷ இதனைத் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் தெரிவித்துள்ளதாவது–

நாடாளுமன்ற உறுப்பினர்களின் நடத்தை தொடர்பில் நாட்டு மக்களிடம் பல விமர்சனங்கள் உள்ளன. இது நியாயமான விமர்சனம். கடந்த காலத்தில் அந்த பொறுப்பை நாடாளுமன்ற உறுப்பினர்கள் நிறைவேற்றாததால் பல்வேறு நடவடிக்கைகளை எடுத்தோம். அவற்றில் அமைச்சரவையில் பிரேரணை ஒன்றையும் சமர்ப்பித்துள்ளோம்.

நாடாளுமன்ற தரநிலை தொடர்பில் நாடாளுமன்றத்தில் புதிதாக சட்டமூலம் தாக்கல் செய்யப்படும். நாடாளுமன்ற உறுப்பினர் ஒருவர் தனது பதவியின் கௌரவத்தை காக்காத வகையில் செயற்பட்டால் மற்றும் அவர் சட்டத்துக்குப்



புறம்பாக ஏதாவது செய்திருந்தால் சுயாதீனமாக நியமிக்கப்படும் குழு ஊடாக அந்த உறுப்பினருக்கு தண்டனை வழங்கப்படும்.

குறிப்பாக நாடாளுமன்ற உறுப்பினர் பதவியை ரத்து செய்யும் வகையில் இந்த சட்டமூலத்தில் ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.– என்றார்.

# வருடாந்தம் 5 ஆயிரம் குற்றச்செயல்கள் சிறுவர்கள் தொடர்பில் பதிவாகின்றன!

## மேல் மாகாண சிரேஷ்ட பிரதிப் பொலிஸ் மா அதிபர் தகவல்

இலங்கையில் வருடாந்தம் சிறுவர்கள் சம்பந்தப்பட்ட சுமார் 5 ஆயிரம் குற்றச் செயல்கள் பதிவாகுகின்றன என்று மேல் மாகாணத்துக்குப் பொறுப்பான சிரேஷ்ட பிரதிப் பொலிஸ் மா அதிபர் தேஷபந்து தென்னகோன் தெரிவித்துள்ளார்.

போதைப் பொருள் பாவனை மற்றும் செல்போன் பாவனையே இவ்வாறான பல குற்றச் செயல்களுக்கு வழிவகுத்துள்ளன என்று அவர் தெரிவித்துள்ளார்.

இது குறித்து மேல் மாகாணத்துக்குப் பொறுப்பான சிரேஷ்ட பிரதிப் பொலிஸ் மா அதிபர் தேஷபந்து தென்னகோன் மேலும் கருத்து தெரிவிக்கையில்,

‘இலங்கையில் வருடாந்தம் சிறுவர்களுக்கு எதிராக 5 ஆயிரம் குற்றச் செயல்கள் பதிவாகின்றன. எமது நாட்டில் பாரிய பிரச்சினையாக மாறியுள்ளது போதைப்பொருள் பிரச்சினையே.

சிறுவர் துஷ்பிரயோகம் மற்றுமொரு



மிகப்பெரிய காரணி. இலங்கையில் மேல் மாகாணத்தில் கொழும்பு, கம்பஹா, களுத்துறை மாவட்டங்களில் பதிவாகும் சிறுவர்கள் தொடர்பான குற்றங்கள் பற்றி எங்களுக் குத் தெரியும்.

கையடக்கத் தொலைபேசிகள் சிறுவர் துஷ்பிரயோகத்துக்கு இட்டுச் செல்லும் ஆபத்தான ஆயுதமாக மாறியுள்ளது.

இலங்கையில் சிறுவர் துஷ்பிரயோகத்தை குறைக்க நாம் முயற்சி எடுத்தால், பெற்றோர்கள் கண்டிப்பாக வீட்டில் கையடக்கத் தொலைபேசி பாவனையை கட்டுப்படுத்த வேண்டும்.” – என அவர் குறிப்பிட்டார்.

# நவீன கருவியைப் பயன்படுத்தி ரயிலில் பணப் பைகள் திருட்டு!

## சந்தேகத்தில் ஒருவர் பொலிஸாரால் கைது

கொழும்பில் நவீன கருவியை பயன்படுத்தி ரயிலில் பயணிப்பவர்களின் பணப் பைகளைத் திருடி வந்தார் என்ற சநச்தேகத்தில் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

ரயிலில் பயணித்த சந்தேகத்துக்கு இடமான நபர்களை சோதனையிட்ட போதே சந்தேக நபர் கைது செய்யப்பட்டுள்ளார் என்று பாணந்துறை தெற்கு பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

அவரது வலது கை விரலில் நவீன சாதனம் ஒட்டப்பட்ட நிலையில் காணப்பட்டது. அதில் மூன்று வெவ்வேறு வகையான கூர்மையான கத்திகள் இணைக்கப்பட்டுள்ளன என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

பணப்பைகள், பெண்களின் கைப் பைகள், பயணப் பொதிகளில் இருந்த பணம் போன்ற பெறுமதியான பொருள்கள் அந்த சாதனத்தைப் பயன்படுத்தி சந்தேகத்துக்கு இடமின்றி திருடப்பட்டுள்ளன என்று சந்தேக நபரின் வாக்குமூலத்தில் தெரியவந்துள்ளது.

சந்தேக நபர் பாணந்துறை நீதிவான் முன்னிலையில் முன்னிலைப்படுத்தப்பட்டு மேலதிக விசாரணைகள் இடமடம்பெற்று வருகின்றன என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

# நமது கருத்து

உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்



259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com


## துந்தணா 'பட்ஜெட்'!

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க நிதி அமைச்சர் என்ற முறையில் சமர்ப்பித்துள்ள அடுத்த ஆண்டுக்கான வரவு - செலவுத் திட்டம் மந்திரத்தில் மாங்காய் பறிக்கும் வேலை என்று பொருளாதார நிபுணர்கள் பலர் குறை கூறியிருக்கின்றார்கள்.

வழமையாக வரவு - செலவுத் திட்டம் என்றாலேயே 'வரவு எட்டணா, செலவு பத்தணா, கடைசியில் துந்தணா.. துந்தணா...' என்ற கதையாகத்தான் இருக்கும்.

புத்தகத்தில் எழுதிக் காட்டும் கணக்கு வழக்கு ஒன்றாக இருக்கும். யதார்த்தத்தில் நிலைமை வேறாக இருக்கும். இட்டுக்கட்டிய கணக்கு வழக்குகளைக் காட்டி, விடயத்தை ஒப்பேற்றும் வரவு - செலவுத் திட்ட அறிவிப்புகளைத்தான் நாம் கடந்த காலங்களில் கண்டு வந்தோம். கடந்ததற்கு முந்திய ஆண்டுகளிலும் அப்படித்தான் வரவு - செலவுத் திட்டங்கள் சமர்ப்பிக்கப்பட்டன. அத்தகைய போலிக் கணக்கு விடயங்கள் அடங்கிய வரவு - செலவுத் திட்டங்களை காலங் காலமாகச் சமர்ப்பித்தமைதான் - யதார்த்தத்தில் சாத்தியம் இல்லாத மதிப்பீடுகளை மக்கள் காதுகளில் பூச்சுற்றலாக வைத்தமைதான் - இறுதி விளைவாக நாட்டை இப்படிக் கடனிறுக்க முடியாத தேசம் என்ற கட்டத்துக்குக் கொண்டு போய் இறக்கியது.

இப்போது ஜனாதிபதி ரணிலும் மீண்டும் அதே பாணி மூடி மறைப்பு வரவு - செலவுத் திட்டம் ஒன்றைத்தான் சமர்ப்பித்திருக்கின்றார் என்று விமர்சிக்கப்படுகின்றது.

அரச ஊழியருக்கு ஜனாதிபதி அறிவித்துள்ள வாழ்க்கைச் செலவு அலவன்ஸ் மேலதிக கொடுப்பனவு பத்தாயிரம் ரூபாவை வழங்க மேலதிகமாக வருடாந்தம் 156 பில்லியன் ரூபா தேவை. அதேபோல ஓய்வூதியர்களின் அதிகரிப்புக்காக 16 பில்லியன் ரூபா மேலதிகமாக தேவைப்படுகின்றது.

ஆக, இந்த அறிவிப்பைச் செயற்படுத்த மட்டும் அடுத்த ஆண்டில் மேலதிகமாக மொத்தம் 172 பில்லியன் ரூபா அவசியமாகின்றது.

2022 இல் அரச ஊழியர்களுக்கு சம்பள கொடுப்பனவுக்கு மொத்தம் 712.94 பில்லியன் ரூபா ஒதுக்கப்பட்டது. இது தற்போது முடியும் 2023 ஆம் ஆண்டுக்கு 18.84 பில்லியன் ரூபா குறைக்கப்பட்டு 694.1 பில்லியன் ரூபாவாகக் காட்டப்பட்டுள்ளது. அரச ஊழியர்களின் ஒய்வு வயது 65 இலிருந்து 60ஆகக் குறைக்கப்பட்டமையால் 27 ஆயிரம் அரச ஊழியர்கள் இவ்வாண்டில் ஒய்வு பெறுகின்றனர் என்றும், அதனால் இந்தச் செலவினக் குறைப்பு என்றும் அரசு தரப்பில் கணக்குக் காரணம் கூறப்பட்டது. ஆனால் உண்மையில் இதனால் சம்பள செலவின குறைப்பு ஆக 1.15 பில்லியன் ரூபா மட்டும்தான். அதை 18.84 பில்லியன் ரூபா வீழ்ச்சி எனக் கற்பனையில் காட்டி, வரவு - செலவைச் சமாளிக்க முயல்கின்றனர் என்று பொருளாதார நிபுணர்கள் அம்பலப்படுத்துகிறார்கள்.

தான் வழங்கப் போவதாக அறிவித்துள்ள வேதன அதிகரிப்பு போன்றவற்றுக்கு உரிய அளவு நிதி ஒதுக்கீடு செய்யாமல், மந்திரத்தில் மாங்காய் பறிப்பது போல கணக்குகள் காட்டி, வரவு - செலவுத் திட்டத்தை சமாளித்துவிட்டு, இடை நடுவில் தேர்தலை முன்னெடுத்து வென்று விடலாம் என்று காய் நகர்த்துகின்றார் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க.

இந்த மாயாஜால கணக்கின் நெருக்கடி அடுத்த ஆண்டு இறுதியில்தான் நடைமுறையில் கழுத்தை இறுக்கும். அதற்கு முதல் தேர்தல் என்ற தமது இலக்கை முடித்துக் கொண்டு, அதன்பின் வருவதைப் பார்க்கலாமென்று கணக்கு போடுகின்றார் - இல்லை, கணக்கு விடுகின்றார் - ஜனாதிபதி ரணில்.

எது, எப்படி என்றாலும் நாட்டின் நிலைமை கடைசியில் துந்தணாவாகத் தடுமாறப் போவது தவிர்க்க முடியாதது போன்றே தோன்றுகின்றது.

# கிளிநொச்சி நகரில் விழுந்த மரம் இரு கடைகள் சேதம்; ஒருவர் காயம்!

கிளிநொச்சி நகரத்தில் பெரிய வேப்பமரம் ஒன்று விழுந்ததில் வர்த்தக நிலையம் ஒன்று உட்பட இரண்டு கடைகள் சேதமடைந்துள்ளன.

இன்று (20) அதிகாலை ஒரு மணியளவில் இந்த அனர்த்தம் ஏற்பட்டுள்ளது.

ஏ-09 வீதியின் புனித திரேசம்மாள் ஆலயத்துக்கு முன்பாக உள்ள வர்த்தக நிலையத்துக்கு அருகில் நின்ற வேப்பமரம் இன்று அதிகாலை ஒரு மணியளவில் விழுந்துள்ளது.

இதன்போது கடையில் உறங்கிக் கொண்டிருந்தவர் காயங்களுக்கு ஆளாகியுள்ளார். தெய்வாதீனமாக உயிர் தப்பியுள்ளார் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.



## வடமாகாண மரநடுகை மாதம் கார்த்திகை - 2023

"இந்த உலகத்தில் அழகானது எதுவுமே இல்லை என்று ஒருபோதும் சொல்லாதீர்கள். எப்போதும் உங்களை ஆச்சரியப்படுத்தும் அளவுக்கு ஒரு மரத்தின் தோற்றத்தில், ஒரு இலையின் அசைவில் ஏதோவொன்று இருக்கும்"

**-அல்பேட் சுவைற்சர்**

(பிரான்ஸ் தத்துவவியலாளர் – சமாதானத்துக்கான நோபல் பரிசு பெற்றவர்)





# வலி. வடக்கு முகாம்களில் உள்ள மக்கள் வெள்ளத்தால் பாதிக்கப்பட்டு அவலத்தில்

வடக்கு மாகாணத்தில் கடந்த ஒரு வார காலத்துக்கு மேலாக நீடித்து வந்த சீரற்ற காலநிலை காரணமாக யாழ்ப்பாணம் வலி வடக்கு பகுதியில் இலங்கை இராணுவத்தால் 1990 ஆண்டில் பலவந்தமாக வெளியேற்றப்பட்டு, 33 வருடங்களாக தற்காலிக முகாம்களில் வசித்து வரும் குடும்பங்கள் மிகவும் பாதிக்கப்பட்டுள்ளன.

இந்த நிலையில் பாதிக்கப்பட்ட குறித்த குடும்பங்களின் அழைப்பின் பேரில் சனிக்கிழமை (18) மன்னார் சமூக பொருளாதார மேம்பாட்டுக்கான நிறுவனத்தின் தலைவர் ஜாட்சன் பிகிறாடோ தலைமையிலான குழுவினர் அங்கு சென்று பார்வையிட்டுள்ளனர்.

மக்கள் வெள்ளம் காரணமாக தற்காலிகமாக நலன்புரி நிலையம் ஒன்றில் தங்க வைக்கப்பட்டுள்ளனர். அங்கும் அவர்கள் வசிக்கும் முகாம்களுக்கும் அவர் விஜயம் செய்துள்ளார்.

முகாம்களில் வசிக்கும் பல குடும்பங்கள் வெள்ளத்தால் பாதிக்கப்பட்டுள்ளதுடன் அக் குடும்பங்கள் வசிக்கும் பகுதிக்கு அருகாமையில் உள்ள பலர் டெங்கு தாக்கத்துக்கும் உள்ளாகியுள்ளனர் .

இதன் அடிப்படையில் மிகவும் பாதிக்கப்பட்ட நிலையில் ஆபத்தான குடிசைகளிலும் இடிந்து விழக்கூடிய வீடுகளிலும் வசித்து வரும் மக்களின் தற்போதைய தேவை தொடர்பில் மெசிடோ நிறுவனத்தினர் கலந்துரையாடல் ஒன்றை மேற்கொண்டனர்.

இவர்கள் ஒவ்வொரு மழைக்காலங்களிலும் வெள்ள பாதிப்புக்கு உள்ளாகி வருகின்றனர்.

சில குடும்பங்களுக்கு காணிகள் வேறு பகுதிகளில் வழங்கப்பட்ட போதிலும் வீடுகளை அமைப்பதற்கு அரசால் இதுவரை எந்த உதவியும் வழங்கப்படவில்லை. இதனால் அவர்கள் முகாம்களிலேயே வசித்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

# பின்னிரவில் ஒளிர மறுக்கும் மின் விளக்குகளால் சிரமம்!

**(நூருல் ஹுதா உமர்)**



அம்பாறை மாவட்ட காரைதீவு பிரதேச சபை எல்லைக்குட்பட்ட காரைதீவு- அம்பாறை பிரதான வீதியில், வீதி அபிவிருத்தி அதிகார சபையால் மாவடிப்பள்ளி பிரதேசத்தில் நிர்மாணிக்கப்பட் தெருவிளக்குகள் பிந்திய இரவுகளில் ஒளிர்வதில்லை. இதனால் இருள் சூழ்ந்து காணப்படுகிறது. பொது மக்களும், பாதசாரிகளும் வீதியில் அச்சத்துடன் பயணிக்க வேண்டிய நிலைமை ஏற்பட்டுள்ளது.

இது தொடர்பில் பல தடவைகள் ஊடகங்களின் வாயிலாக செய்திகள் வழங்கப்பட்டிருந்த போதும் நடவடிக்கை எடுக்கப் படவில்லை என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

யானைகளின் நடமாட்டம், முதலைகள் கரையொதுங்குதல், கட்டாக்காலி மாடுகளின் நடமாட்டம் என்று மாவடிப்பள்ளி பிரதேசம் இரவில் பயணிக்க முடியாதவாறு ஆபத்தான பிரதேசமாக காட்சியளிக்கிறது.

அது மாத்திரமின்றி இருள் சூழ்ந்துள்ளமையால் இந்தப் பிரதேசத்தில் பல சட்டவிரோத செயற்பாடுகள் நடைபெற வாய்ப்புள்ளது என்று மக்கள் அச்சம் வெளியிடுகின்றனர்.

ஆகவே இது தொடர்பில் சம்பந்தப்பட்ட அதிகாரிகள், காரைதீவு பிரதேச சபை நிர்வாகத்தினர் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று மக்கள் கேட்டுள்ளனர்.

# காஸாவில் படுகொலை நிறுத்தப்பட்டு நீதி நிலை நாட்டப்படுதல் வேண்டும்!

## இலங்கை ஜமாஅத்தே இஸ்லாமி கண்டன அறிக்கை வெளியீடு

(நாசிக் நபாயிஸ்)

பாலஸ்தீனத்தின் காஸா நிலப் பரப்பில் படுகொலைகள் நிறுத்தப்பட்டு அங்கு நீதி நிலைநாட்டப்பட வேண்டும்.

இலங்கை ஜமாஅத்தே இஸ்லாமி அமைப்புத் தெரிவித்துள்ளது. இதனை வன்மையாகக் கண்டிப்பதாகவும் குறிப்பிட்டுள்ளது.

இது தொடர்பில் வெளியிட்டுள்ள கண்டன அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளவை வருமாறு–

இஸ்ரேலிய இராணுவம் தொடர்ச்சியாக ஈவீரக்கமற்ற விதத்தில் குண்டுத் தாக்குதல் மேற்கொண்டு வருகிறது. அதன் மூலம் நோயாளிகள், குழந்தைகள், பெண்கள், வயோதிபர்கள் என வித்தியாசமின்றி சாதாரண பொது மக்கள் அநியாயமாகக் கொலை செய்யப்படுகின்றனர். இந்த அட்டூழியந்துக்கு மேற்கு நாடுகள் நிபந்தனையற்ற ஆதரவு வழங்கி வருகிறது.

முதலாம் உலக மகா யுத்தத்தைத் தொடர்ந்து அப்போது பாலஸ்தீன் மீது ஆதிக்கம் செலுத்திய பிரித்தானிய ஏகாதிபத்தியம் உலக ஸியோனிஸ இயக்கத்துடன் இணைந்து உலகெங்கிலும் சிதறி வாழ்ந்த யூதர்களை பாலஸ்தீனத்தில் குடியமர்த்தியது. 1947 இல் இஸ்ரேல் என்ற நாட்டை பாலஸ்தீன பூமிக்குள் திணிக்க ஐக்கிய நாடுகள் பாதுகாப்புச் சபை தீர்மான மெடுத்தது. அப்பிரதேசத்தில் வாழ்ந்த பாலஸ்தீனியர்கள் அங்கிருந்து துரத்தியடிக்கப்பட்டனர்.

1967 ஆம் ஆண்டு யுத்தத்தில் இஸ்ரேல் கிழக்கு ஜெருசலேம், காஸா , மேற்குக்கரை போன்ற பாலஸ்தீனின் எஞ்சிய பிரதேசங்களையும் அபகரித்துக் கொண்டதோடு சிரியா, எகிப்து ஆகிய நாடுகளின் நிலப்பிரதேசங்களை ஆக்கிரமித்து தனது தாய் நாட்டின் எல்லையை விஸ்தரித்துக் கொண்டது.

தொடர்ந்தும் தாம் அபகரித்த நிலத்தில் புதிய குடியேற்றங்களை அமைத்து பாலஸ்தீனர்களின் நடமாட்டத்தைக் கட்டுப்படுத்தக் குறுக்காக நீண்ட மதில்களை அமைத்து பாலஸ்தீன மக்கள் வாழும் பிரதேசங்களை சிறைச்சாலைகளாகவே மாற்றியுள்ளது. இத்தனை அநியாயங்களுக்கு மத்தியிலும் மேற்கு நாடுகள் இஸ்ரேலுக்கு பக்கபலமாகவே இருந்து வருகின்றன.

பாலஸ்தீன மக்கள் கடந்த 75 வருடங்களாக தமது சொத்த நாட்டில் திறந்த சிறைச்சாலையில் வாழும் அவலநிலை தொடர்கின்றது. நாடற்ற நிலையில் இருந்த யூதர்களுக்கு அபகரித்துக் கொடுக்கப்பட்ட பாலஸ்தீனில் அதன் சொந்த மக்கள் இன்று அடிப்படை மனித உரிமைகள் புறக்கணிக்கப்பட்ட நிலையில் அத்தியாவசிய தேவைகளைக் கூட அடைந்து கொள்ள முடியாத இக்கட்டான நிலைக்கு தள்ளப்பட்டுள்ளனர்.

இரண்டாம் உலக மகா யுத்தத்தின் போது உலகப் படத்திலேயே இல்லாதிருந்த இஸ்ரேல் இன்று பாலஸ்தீனத்தை ஆக்கிரமித்து அகன்ற இஸ்ரேலாக மாறியுள்ளது. நிரந்தர அடக்குமுறைக்கு உள்ளாக்கப்பட்டுள்ள பாலஸ்தீன மக்களின் பொறுமை எல்லை கடந்து இஸ்ரேலைத் தாக்கும் போது அது பயங்கரவாதமாகப் பார்க்கப்படுகின்றது.

இஸ்ரேல் ஆக்கிரமிப்புக்கு எதிராகவும் அதன் யுத்த குற்றங்களுக்கு எதிராகவும் ஐ.நா. பொதுச் சபை பல தீர்மானங்களை நிறைவேற்றினாலும் அவை பயனற்றுப் போவதற்குப் பிரதான காரணம் அமெரிக்கா, ஐ.நா. பாதுகாப்புச் சபையில் இஸ்ரேலுக்கு வழங்கும் நிபந்தனையற்ற ஆதரவாகும்.

இந்த விவகாரத்தில் மேற்கத்திய ஊடகங்களின் பக்கச்சார்பான போக்கும் கண்டிக்கத்தக்கதாகும். அதேவேளை, மேற்கத்திய ஊடகங்களின் பொய்ப் பிரசாரங்களுக்கு மத்தியிலும் மேற்கு, கிழக்கு என்ற வித்தியாசமின்றி பாலஸ்தீனில் நீதிகோரி உலகெங்கும் நடைபெற்று வரும் ஆர்ப்பாட்டங்கள் நம்பிக்கையூட்டுவதும் பாராட்டப்பட வேண்டியதுமாகும்.

பாலஸ்தீன் மக்களின் இத் துயர நிலை தொடர்வது நியாயமானதல்ல. அவர்களின் 75 வருட சிறை வாழ்க்கை முடிவுக்கு வரவேண்டும். தமது சொந்தப் பூமியில் பாலஸ்தீன அரசை அமைத்து உலகின் ஏனைய மக்களைப் போன்று அவர்களும் சராசரி குடிமக்களாக வாழும் நிலை அவர்களுக்குப் பெற்றுக் கொடுக்கப்பட வேண்டும். இது மனிதாபிமானத்தை விரும்பும் ஒவ்வொரு உலகப் பிரஜையினதும் கடமையும் பொறுப்புமாகும்.–என்றுள்ளது.

# கல்முனை சமுர்த்தி வங்கியின் முன்னாள் முகாமையாளர் கௌரவிப்பு

( எம்.என்.எம்.அப்ராஸ்)

கல்முனை சமுர்த்தி வங்கியின் முகாமையாளராக கடந்த 5 வருடங்கள் சிறப்பாக கடமையாற்றி, தற்போது மட்டக்களப்பு மாவட்டத்துக்கு இடம் மாற்றம் பெற்றுச் சென்றுள்ள முகாமையாளர் மோசேஸ் புவிராஜ் கல்முனை பிரதேச செயலக பிரிவில் உள்ள சமுர்த்தி முகாமையாளர்கள், மற்றும் அனைத்து சமுர்த்தி உத்தியோகத்தர்கள், ஊழியர்கள் ஆகியோரால் கௌரவிக்கப்பட்டுள்ளார்.

நிகழ்வு கல்முனை சமுர்த்தி வங்கியில், வங்கி முகாமையாளர் யு.கே. சிறாஜ் தலைமையில் நேற்று முன்தினம் (18)இடம்பெற்றது.

இதில் கல்முனை பிரதேச செயலர் ஜே.லியாகத்தலி, தலைமைபீட சிரேஷ்ட



சமுர்த்தி முகாமையாளர் ஏ.ஆர்.எம். சாலிஹ், நற்பிட்டிமுனை சமுர்த்தி வங்கி முகாமையாளர் எம்.ஏ.எம்.பைசால், வங்கி உதவி முகாமையாளர் எம்.எஸ். எஸ்.றிபாயா,வலய உதவி ஐ.எல். அர்சுத்தீன் மற்றும் வங்கி உத்தியோகத்தர்கள், பிரிவுகளின் சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர்கள், கட்டுப்பாட்டு சபை தலைவர் என பலரும் கலந்து கொண்டனர்.





# சமூக ஒருமைப்பாட்டு நிகழ்வு!

(அஸ்ஹர் இப்றாஹிம்)

அக்கரைப்பற்று வலயத்தின் ஏற்பாட்டில் வலயக் கல்விப் பணிப்பாளர் அஷ்ஷேக் ஏ.எம். றஹ்மத்துல்லாஹ்கின் ஆலோசனைக்கு அமைவாக அட்டாளைச்சேனை தேசிய பாடசாலையில் வலயமட்ட சமூக ஒருமைப்பாட்டு முகாம் நடைபெற்றது.

இந்த நிகழ்வு அக்கரைப்பற்று வலய சமூக விஞ்ஞான பாடத்துக்கான ஆசிரிய ஆலோசகர் எம்.ஏ.ஏ.றபீக் தலைமையில் இடம்பெற்றது. நிகழ்வில் பிரதம அதிதியாக அக்கரைப்பற்று வலயக் கல்வி பணிப்பாளர் அஷ்ஷேக் ஏ.எம். றஹ்மதுல்லாஹ் கலந்து கொண்டார். கௌரவ அதிதியாக அட்டாளைச்சேனை தேசிய பாடசாலை பிரதி அதிபர் ஏ.கே. நியாஸ் கலந்து கொண்டார்.

இதில் அக்கரைப்பற்று, திருக்கோவில், அம்பாறை வலயங்களைச்சேர்ந்த மாணவர்களும் ஆசிரிய ,ஆசிரியைகளும் கலந்து கொண்டனர்.



இந்நிகழ்வில் மாணவர்களது பல்வேறு கலை கலாசார நிகழ்வுகள் அரங்கேறின. பாரம்பரிய , சமய விளையாட்டு நிகழ்வுகளும் இடம்பெற்றன.

இந்த நல்லிணக்க நிகழ்வில் அட்டாளைச்சேனை தேசிய பாடசாலை, அக்கரைப்பற்று முஸ்லிம் மத்திய கல்லூரி, ஸ்ரீ இராமகிருஸ்ணா கல்லூரி, ஸ்ரீ இராமகிருஸ்ணா மகா வித்தியாலயம், அல்- ஸிறாஜ் மகா வித்தியாலயம், ஸ்ரீ தம்மரத்ன சிங்கள வித்தியாலயம், மதீனா வித்தியாலயம், அக்கரைப்பற்று கனிஷ்ட வித்தியாலயம், அல்- கமர் வித்தியாலயம், முனவ்வரா கனிஷ்ட கல்லூரி, அஸ்- ஸிறாஜ் கனிஷ்ட கல்லூரி ஆகிய பாடசாலைகள் கலந்து கொண்டன.



# பெற்றோர் - ஆசிரியர்கள் கல்முனையில் ஒன்றுகூடல்

(அஸ்ஹர் இப்றாஹிம்)

கல்முனை மஹ்மூத் மகளிர் கல்லூரியில் கல்வி பயிலும் மாணவிகளின் பெற்றோருக்கும் கல்லூரி ஆசிரியர்களுக்குமிடையில் தொடர்பை ஏற்படுத்தும் வகையில் ஒழுங்கு செய்யப்பட்டிருந்த ஒன்றுகூடல் நிகழ்வு கல்லூரி அதிபர் ஏ.பி.நஸ்மியா சனூஸ் தலைமையில் (18)நடைபெற்றது.

கல்லூரிக்கும் சமூகத்துக்கும் இடையிலான தொடர்பை ஏற்படுத்திக் கொள்வதற்கும் மாணவிகள் கல்வி செயற்பாடுகள், ஒழுக்கம், பரீட்சை பெறுபேறுகள், வகுப்பறை சூழல், பௌதீக வளங்கள் தொடர்பாக தரம் 6,7,8,9 மாணவிகளின் பெற்றோர்களுடன் தொடர்பை ஏற்படுத்தும் வகையில் இந்த நிகழ்வு ஒழுங்கு செய்யப்பட்டிருந்தது.

இந்நிகழ்வில் பிரதி, உதவி அதிபர்கள், பகுதித் தலைவர்கள் அந்தப் பகுதிக்கு உரிய வகுப்பாசிரியர்கள், பாடசாலை அபிவிருத்தி நிறைவேற்றுக்குழு உறுப்பினர்கள், பெற்றோர்கள் என பலரும் கலந்து கொண்டனர்.



# மஹா ஓயா பகுதிகளில் வெள்ளப்பெருக்கு அபாயம்

மஹா ஓயா ஆற்றின் மேல் மற்றும் மத்திய பகுதிகளில் கணிசமான மழை பெய்து வருவதால் பல பிரதேச செயலர் பிரிவுகள் பெரியளவில் வெள்ளப் பெருக்கு ஏற்படக் கூடும் என்று நீர்ப் பாசன திணைக்களம் எச்சரித்துள்ளது.

இதன்படி, அலவ்வ, திவுலப்பிட்டிய, மீரிகம, பன்னல, வென்னப்புவ, நீர் கொழும்பு, கட்டான, நாரம்மல மற்றும் தங்கொடுவ ஆகிய பிரதேச செயலாளர் பிரிவுகளுக்கு உட்பட்ட மஹா ஓயா ஆற்றின் தாழ்வான பகுதிகளில் பாரி யளவில் வெள்ளப்பெருக்கு ஏற்படக் கூடும் என்று அந்த திணைக்களம் அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளது.

மேலும், தெதுறு ஓயா, தப்போவ, வெஹரலகல, லுனுகம்வெஹர, மவ்வார மற்றும் உடவலவ ஆகிய நீர்த்தேக்கங்களின் வான் கதவுகள் தொடர்ந்து திறக்கப்பட்டுள்ளன என்று நீர்ப்பாசன திணைக்களம் தெரிவித் துள்ளது.

பொகவந்தலாவ மஹாஎலிய வனப் பகுதி மற்றும் பொகவந்தலாவ ஆகிய பகுதிகளில் பெய்த கடும் மழையுடன் கெசல்கமுஓயா பெருக்கெடுத்து ஓடுவ தால் பொகவந்தலாவ பிரதேசத்தில் பல தாழ்வான நிலங்கள் மற்றும் வீடுகள் வெள்ளத்தில் மூழ்கியுள்ளன.

மத்திய, சப்ரகமுவ மற்றும் ஊவா மாகாணங்களில் சில இடங்களில் 75 மில்லி மீற்றருக்கும் அதிகளவான பலத்த மழைக்கு வாய்ப்புள்ளது என்று அந்த திணைக்களம் அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளது.

இடியுடன் கூடிய மழையுடன் தற் காலிக பலத்த காற்று மற்றும் மின்னல் தாக்கங்களால் ஏற்படக் கூடிய ஆபத்துக் களை குறைத்துக்கொள்ள தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு வளிமண்டலவியல் திணைக்களம், பொது மக்களை கோரியுள்ளது.



# சாய்ந்தமருது ஓ.ஜீ. பூங்காவுக்கு சுற்றுமதில் அமைக்கக் கோரிக்கை

(அஸ்ஹர் இப்றாஹிம்)

சாய்ந்தமருது பிரதேசத்தில் உள்ள ஓ.ஜீ. பொழுது போக்கு பூங்காவுக்குச் சுற்று மதில் அமைக்குமாறு கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

இதனைச் சுற்றியுள்ள பாதுகாப்பு வேலி ஸ்திரத்தன்மையற்று காணப்படு வதை அவதானித்து அதனை சீர் செய் யும் முகமாக ஓ.ஜீ. சமூக சேவை அமைப் பால் பாதுகாப்பான இரும்பு வேலி அமைப்பது தொடர்பாக பிரபல தொழில திபரும் நாபீர் நிதிய ஸ்தாபகருமான பொறியியலாளர் உதுமான் கண்டு நாபீரிடம் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

இதன் போது பாதுகாப்பு வேலி அமைத்தல் தொடர்பான முன்திட்டமும் அதற்கான பாதீடும் அவரிடம் கையளிக் கப்பட்டன.



# தேசிய மட்ட நடனப் போட்டியில் கோட்டக்கல்லாறு இரண்டாம் இடம்

(அஸ்ஹர் இப்றாஹிம்)

அகில இலங்கை ரீதியாக பாடசாலைகளுக்கு இடையில் இடம் பெற்ற தமிழ்மொழித் தின நடனப் போட்டியில் கோட்டைக்கல்லாறு மகா வித்தியாலய மாணவர்கள் இரண்டாம் இடத்தைப் பெற்றுள்ளனர்.

பாடசாலைக்கும் கோட்டைக் கல்லாறு கிராமத்துக்கும் பெருமை தேடித்தந்துள்ள மாணவர்களையும் பயிற்றுவித்த ஆசிரியர்களையும் பாடசாலை அதிபர் தலைமையில் பாடசாலை நிர்வாகமும் கிராம மக்களும் கௌரவித்துள்ளனர்.





# மாற்றுதிறனாளிகளுக்குத் தொழில் வழங்கியவர்கள் கௌரவிப்பு

(ஹஸ்பர்)

சமூக சேவைகள் திணைக்களம் மற்றும் ஜெய்க்கா நிறுவனத்தின் ஏற்பாட்டில் மாற்று திறனாளிகளைத் தொழிலில் இணைத்தல் திட்டத்தின் கீழ் திருகோணமலை மாவட்டத்தில் உள்ள மூதூர் , தம்பலகாமம் , கிண்ணியா, பட்டினமும் சூழலும் பிரதேச செயலக பிரிவில் உள்ள மாற்றுத் திறனாளிகளை வேலை வாய்ப்பு வழங்கப்பட்டு வருகிறது.

இந்த வகையில் கிண்ணியா மூதூர் ,தம்பலகாமம், பட்டிணமும் சூழலும் பிரிவுகளுக்கு உரிய மாற்றுத் திறனாளிகள், தொழில் தருநர்கள், பிரதேச செயலக சமூக சேவை அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் கொழும்பு கிங்ஸ் பெரி விடுதியில் வைத்து நேற்று (19) கௌரவிக்கப்பட்டனர்.

இந் நிகழ்வில் மகளிர் சிறுவர் அலுவல்கள் மற்றும் சமூக வலுப்படுத்துகை அமைச்சின் செயலாளர் திருமதி யமுனா பெரேரா, திருகோணமலை மாவட்ட அரச அதிபர் சாமிந்த ஹெட்டியாராய்ச்சி , சமூக சேவைகள் திணைக்களத்தின் பணிப்பாளர் அனோஜா ஹேரத், உதவி பணிப்பாளர், ஜெய்க்கா திட்டத்தின் உத்தியோகத்தர்கள், சமூக சேவைகள் மாவட்ட இணைப்பாளர்கள் மற்றும் மாவட்ட மனித வள உத்தியோகத்தர்கள் மற்றும் பிரதேச செயலக அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் என பலரும் கலந்து கொண்டனர்.


வடமாகாண மரநடுகை மாதம்
கார்த்திகை 01 - 30, 2023
"ஒரு தேசமாக நிலைத்திருக்க, ஒரு மாநிலமாக வளர, மக்களாக வாழ எங்களிடம் மரங்கள் இருக்க வேண்டும்."
தியோடர் ரூஸ்வெல்ற் - அமெரிக்காவின் 26ஆவது ஜனாதிபதி
ஆளுக்கொரு மரம் நடுவோம்
நாளுக்கொரு வரம் பெறுவோம்
கார்த்திகையில் மரநடுகை தேசத்தை மாத்திரமல்ல;
தமிழ்த் தேசியத்தின் ஆன்மாவையும் குளிரச்செய்யும்!
தமிழ்த் தேசியப் பசுமை இயக்கம்


AIRPORT PIKUP & DROPING
COLOMBO - JAFFNA
WEDDING SERVICE
DAY RENTING
KDH
BEST FOR
VANRENT
Make Your Ride Better
CALL NOW
+94 773 776 882

# சமூகங்களுக்கு இடையில் பிரிவினையை ஏற்படுத்துவோர் கண்டிக்கப்பட வேண்டும்!

## கொழும்பு மாநகர சபை முன்னாள் உறுப்பினர் கலிலூர் ரஹ்மான் தெரிவிப்பு

(மாளிகைக்காடு நிருபர்)

சமூகங்களுக்கு இடையில் பிரிவை உண்டாக்குவோர் கண்டிக்கப்பட வேண்டும். முஸ்லிம் சமூக தலைவர்கள் இதற்கு முன்வரவேண்டும்.

தமிழ் மக்களின் பாரம்பரியமும், கலைநயமும் மிக்க பரதத்தை ஆண்களை மகிழ்விக்கும் விதமாக பரதநாட்டியம் ஆடப்படுவதாகவும், விலைமாதர்கள் ஆடும் நடனமாகவும் கொச்சையான வார்த்தைகளை கொண்டு ஒழுக்கங்கள் இன்றி கடும்போக்காக அப்துல் ஹமீட் ஸராயி மௌலவி பேசியிருக்கும் அந்த விடயங்களை நான் வன்மையாக கண்டிக்கிறேன்.

இவ்வாறு ஜனாதிபதி செயலணியின் முன்னாள் உறுப்பினரும், கொழும்பு மாநகர சபையின் முன்னாள் உறுப்பினருமான ஐ.ஏ. கலிலூர் ரஹ்மான் தெரிவித்துள்ளார்.

இந்த விடயம் தொடர்பில் அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளவை வருமாறு–

இஸ்லாமியர்களால் பல நூற்றாண்டுகளாக கடைபிடிக்கப்பட்டு வந்த பாரம்பரியமிக்க கலாச்சார, கலை, இலக்கிய மரபுகளை பிழைகண்டு அவற்றுக்கு எதிராக பேசி ஒழித்துக்கட்டி பாடசாலைகளில் சினிமா திரைப்படங்களின் குத்துப்பாடல்களை ஒலிபரப்பிக் கொண்டு பாடசாலை விசேட தினங்களில் ஆசிரியர்கள் நடனமாட இப்படியான உலமாக்களே கடந்த காலங்களில் காரணமாக அமைத்துள்ளார்கள். இதனால் எது எமது கலாச்சாரம் எது அந்நிய கலாச்சாரம் என்று அடையாளம் தெரியாமல் தமது ரசனைக்கு விருந்தானவற்றை செய்து ஆசிரியர்கள் மாணவர்களை மகிழ்வித்து கொண்டிருக்கிறார்கள்.

ஆசிரியர்களும் மாணவர்களுக்கு ஒழுக்கமான விடயங்களை போதிக்காமல் இப்படி பாடல்களை ஒலிபரப்பிக் கொண்டு ஆடியது கண்டிக்கத்தக்கது. இந்த சினிமா பாடல்களுக்கான நடனங்களை தமிழர்களின் பாரம்பரியமிக்க பாரத நாட்டியமாக விடயம் தெரியாமல் அப்துல் ஹமீட் ஸராயி மௌலவி பேசியிருக்கிறார்.

எதையோ பற்றிப் பேசவேண்டி விளைந்து இந்துக்களின் மனதைப் புண்படுத்தும் விதமாகப் பரத நாட்டியத்தை ஆண்களுக்கு உணர்வை தூண்டும் நடனமாக பேசியுள்ளார். இந்த விடயமாக இலங்கை பொலிஸ் திணைக்களத்தில் முறைப்பாடுகள் செய்யப்பட்டுள்ளது. இது விடயமாக பொலிஸார் சுயாதீன விசாரணை செய்து குறித்த உலமாவுக்கு எதிராக சட்டநடவடிக்கை எடுக்க வேண்டும்.

இவ்வாறான உலமாக்களைப் பாடசாலைகள், பல்கலைக்கழகங்கள், ஊடகங்கள், மதரஸாக்கள் போன்றவற்றில் மார்க்க பிரச்சாரம் செய்வதைத் தடுக்க அல்லது கற்பித்தல் நடவடிக்கையில் ஈடுபடுவதைத் தடுக்க கல்வி அமைச்சு, புத்தசாசன அமைச்சு, வெகுசன ஊடக அமைச்சு போன்றன நடவடிக்கை எடுக்கவேண்டும். மன்னிப்பு கேட்பதாக அவர் வெளியிட்ட காணொளியில் கூட அவர் தொடர்ந்து அந்த கருத்தை வலியுறுத்தியுள்ளார். தெரியாமல் செய்த குற்றங்களுக்கு மன்னிப்பு வழங்குவதற்கும் விடயமறிந்தவர்கள் செய்யும் தவறுக்கு மன்னிப்பு வழங்குவதற்கும் நிறைய வித்தியாசம் உண்டு.



ஏனைய இனங்களின் மதகுருக்கள் எமது மார்க்கம் தொடர்பில் ஏதாவது பிழையான கருத்துக்களை முன்வைத்தால் கொதித்தெழும் இலங்கையின் உலமாக்கள், அரசியல் தலைவர்கள், சிவில் அமைப்புகளின் தலைவர்கள், மத தலைவர்கள் இந்த விஷயத்தில் மௌனம் காத்திருப்பது கவலையளிக்கிறது.

பிற சமூகங்களுடன் நல்லிணக்கமாக வாழ கற்றுத்தந்த மார்க்கத்தை பின்பற்றும் நாம் எமது சமூக உலமாக்கள் பிழை விட்டாலும் அதை சுட்டிக்காட்டவேண்டியது எமது கடமையாக உள்ளது. இதை செய்யாது மௌனம் காப்பது ஏனைய சமூகங்கள் மத்தியில் முஸ்லிம்கள் தொடர்பில் பிழையான விம்பத்தை உருவாக்கும்.

இப்படியான மௌனமான போக்குகள் எதிர்காலத்தில் எமக்கு பாதகமான சூழ்நிலையை உருவாக்கும் இதனை தவிர்க்கும் வகையில் உலமாக்கள், அரசியல் தலைவர்கள், சிவில் அமைப்புக்களின் தலைவர்கள், மத தலைவர்கள் இந்த விடயத்தில் குரலெழுப்ப வேண்டும்.– என்றார்.



# பாடசலை மாணவர்களுக்கு பாதணிகள் வழங்கி வைப்பு

(எம்.ஏ.ஏ.அக்தார்)

மட்டக்களப்பு, மண்முனை மேற்கு கரவட்டி அரசினர் தமிழ் கலவன் பாடசாலையில் கல்வி பயிலும் 18 மாணவர்களுக்கு கனடா நாட்டில் வசிக்கும் நிலு கோவிந, அமெரிக்காவில் வசிக்கும் சரணிகா பிரதீஷ் ஆகியோரது உதவியுடன் பாதணிகள் வழங்கி வைக்கப்பட்டன.

பாடசாலையில் கல்வி பயிலும் கஷ்டப் பிரதேச மாணவர்களின் கல்வி நடவடிக்கையை மேம்படுத்தும் நோக்கிலும் பாடசாலை இடைவிலகலை தவிர்க்கும் வகையிலும் இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது.





# ஸ்ரீலங்கா போர்க்குற்றங்களில் இஸ்ரேலின் பங்களிப்பு...!

## ஐ.நா. சபை மூலம் விசாரிக்க வேண்டுதல்

■ நவீனன்

**(சிறிலங்காவில் நடந்த போர்க் குற்றங்கள் மற்றும் மனிதகுலத்துக்கு எதிரான குற்றங்களில் இஸ்ரேலிய ஆயுதங்களும் குறிப்பிடத்தக்க அல்ல பாரிய பங்கைக் கொண்டிருந்தன என மனித உரிமை அமைப்புகள் குற்றஞ் சாட்டியுள்ளன)**

இஸ்ரேலிய மனித உரிமை அமைப் புகளின் அமைதிக்காக போராடும் Yesh Gvul மற்றும் Torat Tzedek (Israeli human rights organisations Combatant for Peace) ஆகிய செயற்பாட்டாளர்கள் திரட்டிய சான்று கள், இலங்கையில் நடந்த அட்டூழியங் களில் இஸ்ரேலிய ஆயுதங்களும் இராணுவ உபகரணங்களும் பயன்படுத் தப்பட்டிருக்கலாம் என்பதை தெளிவாக வெளிப்படுத்து உள்ளனர்.

**ஸ்ரீலங்காவின் போர்க் குற்றங்கள்**

ஸ்ரீ லங்காவின் போர்க் குற்றங்க ளுக்கு இஸ்ரேல் உடந்தையாக இருந் தது பற்றி விசாரிக்கப்பட வேண்டும் என ஐக்கிய நாடுகள் சபை மூலம் இந்த மனித உரிமை அமைப்புகள் தற்போது கோரியுள்ளன.

ஸ்ரீலங்காவின் உள்நாட்டுப் போரின் போது, இஸ்ரேல் ஆயுதங்களை விற்று, இலங்கை இராணுவம் கடுமையான அட்டூழியங்களைச் செய்யும் போது அதற்கு ஆதரவாக இருந்தது என தற்போது பல குற்றச்சாட்டுக்களை ஐக்கிய நாடுகள் சபை மூலம் மனித உரிமை அமைப்புகள் தற்போது எழுப்பியுள்ளன.

ஸ்ரீலங்காவில் உள்நாட்டுப் போர் முடிவுக்கு வந்து 14 ஆண்டுகளுக்கும் மேலாகிறது. 30 ஆண்டுகால மோத லால் அழிக்கப்பட்ட நாட்டின் சில பகுதிக ளில் அமைதியின் சாயல் அரிதாக திரும்பியிருந்தாலும், பாதிக்கப்பட்ட வர்களுக்கு இன்னும் நீதி வழங்கப்பட வில்லை என்பதே உண்மை.

பல ஆண்டுகளாக, ஐக்கிய நாடுகள் சபையும் மனித உரிமை அமைப்புகளும் போரின் போது நடந்த போர்க் குற்றங் களை சிரத்தையுடன் ஆவணப்படுத் தியுள்ளன. அரச படைகளால் நடத் தப்பட்ட அட்டூழியங்கள் மீது ஐ.நாவின் கவனம் முக்கியமாக இருந்தது.

ஆனால் ஸ்ரீ லங்கா அரசுக்கு ஆதர வான நாடுகள் சிவிலியன்களுக்கு எதிராக இழைத்த போர்க் குற்றங்களுக்கு உடந்தையாக இருந்திருக்கலாம் என்பது பற்றி அதிக கவனம் செலுத்தப் படவில்லை.

அதிக கவனம் செலுத்தப்படாத விடயங்களில், அதில் இஸ்ரேலின் போருக்கான உடந்தையும் ஒன்று. 2000களில், இஸ்ரேலின் இராணுவ தொழில்நுட்பத்தை கணிசமான அளவில் கொள்வனவு செய்து, ஆசி யாவில் இஸ்ரேலின் மிக முக்கியமான வாடிக்கையாளர்களில் ஒன்றாக இலங்கை ஆனது.

அத்துடன் போரில் ஈடுபட்ட இலங் கைப் படையினருக்கும் இஸ்ரேலியர்கள் பல ஆண்டுகளாக பயிற்சி அளித்தனர்.

இந்தக் குற்றங்களில் இஸ்ரேலின் உடந்தையை அம்பலப்படுத்தவும், வழக்குத் தொடரவும் தாங்கள் விரும்புவதாக இஸ்ரேலிய மனித உரிமை அமைப்புகளின் அமைதிக்காக போராடும் Yesh Gvul மற்றும் வழுசயவ Tzedek ஆகிய செயற்பாட்டாளர்கள் தெரிவித்துள்ளனர்.

ஆளில்லா யூ.ஏ.வி. விமானங்கள் இலங்கை வானில் இஸ்ரேலிய ஆளில்லா யூ.ஏ.வி. விமானங்கள் பல பயன்படுத்தப்பட்டன.

1970 களின் நடுப் பகுதியில், வியட் நாம் போரில் அமெரிக்கா முன்னர் பயன்படுத்திய பழமையான கண் காணிப்பு ஆளில்லா வான்வழி வாக னங்களை இஸ்ரேல் வாங்கி அவற்றை உருவாக்கத் தொடங்கியது. 1980 களில், இஸ்ரேலிய இராணுவம்

**(15ஆம் பக்கம் பார்க்க)**



# ஸ்ரீலங்கா போர்க்குற்றங்களில் இஸ்ரேலின் பங்களிப்பு...!

(14ஆம் பக்கத் தொடர்ச்சி)

லெப னானில் நடந்த போரின் போது இந்த ஆளில்லாத விமானத்தை அட்டூழியமான முறையில் பயன்படுத்தியது.

பின்னர் பலஸ்தீன போராட்ட காலத்தில் காசா பகுதியில் அதன் தாக்குதல்களில் பல ஆளில்லா வான்வழி கலங்களை (யூ.ஏ.வி.) பயன்படுத்தியது.

இந்த தாக்குதல் UAஏக்கள் முன்மாதிரிகளை உருவாக்கி மத்திய கிழக்கில் பொது மக்கள் மற்றும் இராணுவ இலக்குகள் மீது மீண்டும் மீண்டும் இஸ்ரேலால் சோதிக்கப்பட்டது.

உலகம் முழுவதும் இஸ்ரேலின் மிகவும் விரும்பப்படும் தயாரிப்புகளில் ஒன்றாக இது மாறியது. 1990 கள் மற்றும் 2000 களில் விடுதலைப் புலிகளுக்கு எதிரான போர் தீவிரமடைந்திருந்த நிலையில் இலங்கை அரசு இஸ்ரேலிடம் இருந்து செய்த முக்கிய இராணுவக் கொள்வனவுகளில் இவையும் அடங்கும்.

இலங்கை இராணுவத்தின் சொந்த வார்த்தைகளில் கூறினால், இஸ்ரேலில் தயாரிக்கப்பட்ட யூ.ஏ.விகள் "போரில் முக்கிய பங்கு வகித்தன" என மனித உரிமை அமைப்புகள் தற்போது குரல் எழுப்பியுள்ளன.

இலங்கை அரசின் மூத்த அதிகாரிகள் மற்றும் பாதுகாப்புப்படை அதிகாரிகள் பலமுறை பேட்டிகள் மற்றும் அறிக்கைகளில், தாக்குதல்களுக்கு முன், "பொது மக்களுக்குப் பூஜ்ஜிய தீங்கு" என்ற கொள்கையின்படி, அப்பகுதியில் பொதுமக்கள் யாரும் காணப்படவில்லை என்பதை சரிபார்க்க, யூ.ஏ.வி. படம்பிடிக்கப்பட்ட பயன்படுத்தப்பட்டன என்று கூறியுள்ளனர்.

### பொதுமக்களுக்கு கடுமையான பாதிப்பு

ஆனால், உண்மையில் பொது மக்களுக்கு கடுமையான பாதிப்புகள் ஏற்பட்டதற்கான ஆதாரங்களை ஐ.நாவும், பல என மனித உரிமை அமைப்புகளும் தற்போது குற்றஞ் சாட்டியுள்ளன.

ஐ.நா. மதிப்பீடுகளின்படி, போரின் கடைசி மாதங்களில் மட்டும், 40,000 முதல் 75,000 வரையிலான தமிழ் பொது மக்கள் கொல்லப்பட்டுள்ளனர். அவர்களில் பெரும்பாலோர் அரச பாதுகாப்புப் படையினரின் வேண்டுமென்றே துப்பாக்கிச் சூடு நடத்தியதால் கொல்லப்பட்டனர் என மனித உரிமை அமைப்புகளும் குற்றஞ்சாட்டியுள்ளன.

2015 ஐ.நா. அறிக்கை யூ.ஏ.விகளின் பயன்பாட்டைக் கருத்தில் கொண்டு, பொதுமக்கள் உயிர் இழப்பு மற்றும் பொது மக்களின் சொத்துக்களுக்கு சேதம் உண்டாகியது உண்மையே. சர்வதேச மனிதாபிமானச் சட்டத்தை மீறி அரசு மற்றும் இராணுவத் தலைவர்களின் உத்தரவுப்படி இஸ்ரேலிய யூ.ஏ.விகள் பொது மக்களின் மரணங்களை பாரியளவில் உருவாக்கியது.

இதன் மூலம் இலங்கையில் நடந்த போர்க் குற்றங்கள் மற்றும் மனித குலத்துக்கு எதிரான குற்றங்களில் மற்ற இஸ்ரேலிய ஆயுதங்களும் குறிப்பிடத்தக்க பங்கைக் கொண்டிருந்தன என்பதனை உறுதிப்படுத்தியது.

### தமிழர்க்கு எதிரான போர்

தமிழர்க்கு எதிரான போரில், இஸ்ரேலில் தயாரிக்கப்பட்ட முகசை போர் விமானங்கள், Dvora மற்றும் Shaldag போர்க்கப்பல்கள், தாக்குதல் பீரங்கி அமைப்புகள் மற்றும் Gabriel கடலில் இருந்து கடலுக்கு வீசும் ஏவுகணைகளையும் இலங்கை வாங்கியது.

அத்துடன் இஸ்ரேலிய கண்காணிப்பு யூ.ஏ.விகள் இந்த கனரக ஆயுதங்களுக்கு வழிகாட்டுவதற்குப் பயன்படுத்தப்பட்டன. அவை வேண்டுமென்றே பொது மக்கள் மற்றும் மனிதாபிமான தளங்களை குண்டுவீசி அழித்தன. அத்துடன் கடுமையான செலவில் தமிழர்க்கு எதிரான போரை வெல்ல இந்த ஆயுதங்கள் உதவியதும் உண்மையே.

செஞ்சோலை கிராமத்தில் உள்ள சிறுமிகள் காப்பகத்தின் மீது இலங்கை விமானப்படை குண்டுவீசி 80 குழந்தைகளைக் கொன்றதுடன், பலரை காயப்படுத்தியது. ஆகஸ்ட் 14, 2006 இல் இஸ்ரேல் தயாரிப்பு முகசை விமானங்களை உக்ரேனிய விமானிகளே ஓட்டி வந்து இக் கொடூர சம்பவத்தை விளைவித்தனர்.

### செஞ்சோலைப் படுகொலை

இலங்கையில் உள்ள அரசுக்கு ஆயுதங்கள் மற்றும் பயிற்சிகளை மற்ற நாடுகளும் வழங்கின. அத்துடன் இஸ்ரேலிய இராணுவ ஆய்வாளர் ஷ்லோமி யாலின் கூற்றுப்படி, "வழங்கப்பட்ட ஆயுதங்களின் பெறுமதி, பல நூற்றுக் கணக்கான மில்லியன் அமெரிக்க டாலர்களை எட்டுகிறது." போருக்குப் பின்னர் இஸ்ரேலுக்கான தூதுவராக நியமிக்கப்பட்ட இலங்கையின் முன்னாள் தலைமை அதிகாரி டொனால்ட் பெரேராவும் இதனை உறுதிப்படுத்தியுள்ளார்.

ஜூலை 21, 2010 அன்று இஸ்ரேலிய Ynet News இணையத்தளத்துக்கு அவர் அளித்த பேட்டியில், பல ஆண்டுகளாக இஸ்ரேல் தமிழர்க்கு எதிரான நமது போருக்கு தகவல் பரிமாற்றம் மற்றும் இராணுவ தொழில்நுட்பம் மற்றும் உபகரணங்களை வழங்கி உதவியது.

### இஸ்ரேலிலும் இலங்கையிலும் நீதி கேட்கும் தமிழர்

போரின் போது நடந்த அட்டூழியங்கள் குறித்து சர்வதேச அமைப்புகள் மற்றும் மனித உரிமை அமைப்புகளிடமிருந்து திரட்டப்பட்ட சான்றுகள் மற்றும் பல அறிக்கைகள் இருந்த போதிலும், அவர்களுக்கு நேரடியாகப் பொறுப்பானவர்கள் அல்லது இஸ்ரேல் மற்றும் பிற நாடுகளில் இருந்து அவர்களுக்கு மறைமுகமாக உதவியவர்கள் மீது வழக்குத் இதுவரை தொடரப்படவில்லை.

ஐ.நா. இறுதிப் போரின் போது பொது மக்களைப் பாதுகாக்கத் தவறிவிட்டது. இது 2011 இல் ஊடகங்களுக்கு கசிந்த அதன் சொந்த உள்ளக அறிக்கையில் பிரதிபலித்தது. போருக்குப் பிறகு, ஐ.நா. பாதிக்கப்பட்ட பொது மக்களை மீண்டும் தோல்வியுறச் செய்யும் வண்ணம், போர்க் குற்றங்கள் மற்றும் குற்றங்களுக்கான நீதியை அவர்களுக்கு வழங்கவில்லை. அவர்களுக்கு எதிராக நடந்த மனித குலத்துக்கு எதிராக நடந்த கொடுமைகளை விசாரிக்க இல்லை.

பொதுவாக மனித உரிமைகளைப் பாதுகாப்பதில் அதிக கவனம் செலுத்தும் மேற்கத்திய நாடுகள், தமது குறுகிய பொருளாதார, இராணுவ மற்றும் அரசியல் நலன்களுக்காக இலங்கை அரசாங்கத்துடன் வழக்கம் போல் வணிகத்தைத் தொடரவே விரும்புகின்றன.

இது உலகெங்கிலும் உள்ள சர்வாதிகாரிகள் மற்றும் அடக்குமுறை ஆட்சிகளுக்கு சிவிலியன்கள் மீதான தாக்குதல்கள் முழுமையான அளவில் செய்யப்படலாம் என்ற சமிக்ஞையை அனுப்பியுள்ளது.

சமீபத்திய ஆண்டுகளில், இஸ்ரேலிய மனித உரிமை ஆர்வலர்கள், இஸ்ரேலின் நிறவெறிக் கொள்கைகள், மனித நேயத்துக்கு எதிரான குற்றங்கள் மற்றும் பாலஸ்தீன மக்களுக்கு எதிரான போர்க்குற்றங்களைத் தடுக்கவும் முயல்கின்றனர்.

### இஸ்ரேலிய ஈடுபாடு

பெப்ரவரி 2002 மற்றும் மே இடையே இலங்கை உள்நாட்டுப் போரில் இஸ்ரேலிய ஈடுபாடு பற்றிய தகவல்களை சேகரித்த அவர்கள், 2009 சர்வதேச மற்றும் இஸ்ரேலிய தண்டனைச் சட்டத்தின் கீழ், இஸ்ரேலிய நிறுவனங்கள், அதிகாரிகள் மற்றும் தனியார் தனிநபர்கள் செய்த குற்றங்களில் ஈடுபட்டுள்ள குற்றவியல் விசாரணையை நியாயப்படுத்த போதுமான ஆதாரங்கள் உள்ளன என கூறியுள்ளனர்.

இலங்கையில் இடம்பெற்ற குற்றச் செயல்களில் ஈடுபட்ட இஸ்ரேலியர்களுக்கு எதிராக குற்றவியல் விசாரணையை ஆரம்பிக்குமாறு இஸ்ரேலின் அட்டர்னி ஜெனரலிடம் கோரிக்கையை முன்வைக்க அவர்கள் தீர்மானித்துள்ளனர். அதனை சர்வதேச அரங்கிலும் செய்ய முயல்கின்றனர்.

ஆயினும் சட்ட நடவடிக்கைக்கான வாய்ப்பு மிகக் குறைவு. ஒருவேளை இலங்கையில் நடந்த குற்றங்களை உலகம் பெரிதாக எடுத்துக் கொள்ளாமல் விடலாம்.

காஸாவிலும் மேற்குக் கரையிலும் இஸ்ரேல் தொடர்ந்து குற்றங்களைச் செய்கிறதும் உலகம் அறிந்ததே.

# விசாகப்பட்டினத்தில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த 40 இற்கும் மேற்பட்ட மீன்பிடி படகுகள் தீக்கிரை



விசாகப்பட்டினம் மீன்பிடித் துறைமுகத்தில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த 40 இற்கும் மேற்பட்ட மீன்பிடி படகுகள் நேற்று நள்ளிரவு ஏற்பட்ட தீ விபத்தில் எரிந்து நாசமாகியுள்ளன.

விசாகப்பட்டினம் மீன்பிடி துறைமுகத்தில் மீனவர்களின் படகுகள் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த இடத்தில் நேற்று நள்ளிரவு பயங்கர தீ விபத்து ஏற்பட்டுள்ளது.

ஒரு படகில் இருந்து பரவிய தீ, அடுத்தடுத்து ஏனைய படகுகளுக்கு பரவி பெரும் தீ விபத்து ஏற்பட்டுள்ளது என என தகவல் வெளியாகி உள்ளது.

தகவலறிந்து 4 இற்கும் மேற்பட்ட தீயணைப்பு வாகனங்களில் விரைந்த தீயணைப்பு துறையினர், துறைமுக அதிகாரிகள் தீயைக் கட்டுக்குள் கொண்டுவர போராடினர்.

படகில் வைத்திருந்த எல்.பி.ஜி. சிலிண்டர்கள் வெடித்ததால் தீ விபத்து ஏற்பட்டிருக்கலாம் என்று முதற்கட்ட விசாரணையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கரையில் நிறுத்திவைக்கப்பட்டிருந்த 50 இற்கும் மேலான படகுகள் எரிந்ததால் மீனவர்கள் அதிர்ச்சி அடைந்துள்ளனர்.

இந்தச் சம்பவம் குறித்து பொலிஸார் வழக்கு பதிவு செய்து மேலதிக விசாரணை மேற்கொண்டு வருகின்றனர்.

# தே.மு.தி.க. தலைவர் விஜயகாந்தின் உடல்நிலை சீராக உள்ளது!

## - அமைச்சர் மா.சுப்பிரமணியன் தகவல்



"தே.மு.தி.க. தலைவர் விஜயகாந்தின் உடல்நிலை சீராக உள்ளது. இதுகுறித்து அவர் சிகிச்சைப் பெற்று வரும் தனியார் மருத்துவமனையை தொடர்பு கொண்டு பேசினேன். அவர் நன்றாக இருக்கிறார். அவசர சிகிச்சை பிரிவில் இருக்கிறாரே தவிர, அவரது உடல்நிலை சீராகவே இருக்கிறது."

– இவ்வாறு தமிழக மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா.சுப்பிரமணின் தெரிவித்தார்.

சென்னையில் தமிழக மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் இன்று செய்தியாளர்களைச் சந்தித்தார். அப்போது தே.மு.தி.க. தலைவர் விஜயகாந்தின் உடல்நிலை குறித்து கேட்கப்பட்டது. அதற்குப் பதிலளித்த அவர், "கடந்த இரண்டு நாட்களாக அவருக்கு தொடர்ந்து இருமல் பாதிப்பு இருந்தது.

இதன் காரணமாக ஒரு தனியார் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டிருக்கிறார். நானும் அந்த மருத்துவ நிர்வாகத்தோடு பேசினேன்.

அவரது உடல்நிலை சீராகவே இருக்கிறது. ஏற்கெனவே, அவருக்கு கிட்னி மாற்று அறுவை சிகிச்சை செய்யப்பட்டுள்ளதால், அதுதொடர்புடைய மருத்துவரே, தற்போது அவருக்கு ஏற்பட்டுள்ள இருமல் தொடர்பான பிரச்சினைக்கும் மருத்துவம் பார்க்க வேண்டும் என்ற நிலையில், அந்த தனியார் மருத்துவமனையில் அவரை மிகச் சிறப்பாக கண்காணித்துக் கொண்டிருக்கிறார்கள்.– என்றார்.

இதனிடையே, தே.மு.தி.க. தரப்பில் இன்று வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பில்,

"தே.மு.தி.க. நிறுவனத்தலைவர் பொதுச்செயலாளர் விஜயகாந்த், வழக்கமான மருத்துவப் பரிசோதனைக்காக சென்று இருக்கிறார். அவர் ஓரிரு நாளில் வீடு திரும்புவார். செயற்கை சுவாசம் கொடுக்கப்படுவதாக தவறான செய்திகளை யாரும் நம்பவேண்டாம். இது முற்றிலும் தவறான செய்திகள். இதுபோன்ற வதந்திகளை யாரும் நம்பவும் வேண்டாம், யாரும் பரப்பவும் வேண்டாம்" என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

முன்னதாக, தேமுதிக தலைவர் விஜயகாந்த் உடல்நலக் குறைவு காரணமாக சென்னையில் உள்ள தனியார் மருத்துவமனையில் கடந்த 18 ஆம் திகதி அனுமதிக்கப்பட்டார்.

அவர் வழக்கமான மருத்துவப் பரிசோதனைக்காக சென்றுள்ளார் என தே,மு,தி,க, தரப்பில் விளக்கம் அளிக்கப்பட்டிருந்தது.

# இந்தியா நோக்கி சென்ற இஸ்ரேலிய கப்பல் ஹவுத்தி கிளர்ச்சியாளர்களால் கடத்தல்!




இந்தியா நோக்கி சென்று கொண்டிருந்த இஸ்ரேலின் பெரும் பணக்காரருக்கு சொந்தமான கப்பல் ஒன்றை ஏமனின் ஹவுத்தி கிளர்ச்சிப் படையினர் கடத்தியுள்ளனர்.

அந்தக் கப்பலில் இருந்த 25 பேரும் பணயக் கைதிகளாகப் பிடிக்கப்பட்டுள்ளனர். இஸ்ரேல் – ஹமாஸ் போர் தற்போது அந்தப் பிராந்தியத்தில் கடல்வழியில் எதிரொலிக்கத் தொடங்கியுள்ளதன் அடையாளமாக இந்தக் கடத்தல் சம்பவம் உலக நாடுகளால் பார்க்கப்படுகிறது.

இது தொடர்பாக ஈரான் ஆதரவு ஹவுத்தி படைகள் கூறும்போது, இஸ்ரேலுடன் தொடர்புடைய காரணத்தாலேயே அந்தக் கப்பலை நாங்கள் சிறைப்பிடித்துள்ளோம். காசா மீதான இஸ்ரேல் தாக்குதல் நிறுத்தப்படும் வரை கடல் பகுதியில் இதுபோல் இஸ்ரேல் கப்பல்களை குறிவைப்போம்.

இஸ்ரேல் நாட்டுக் கப்பலோ இல்லை இஸ்ரேலுடன் வர்த்தக தொடர்புள்ள கப்பலோ நிச்சயமாக எங்களின் இலக்காகும் என்று எச்சரித்துள்ளனர்.

ஹவுத்தி படைகளின் தலைமை செய்தித் தொடர்பாளர் முகமது அப்துல் சலாம் வெளியிட்ட அறிக்கையில், இஸ்ரேலியர்களுக்கு அடக்குமுறை தான் புரியும். இஸ்ரேல் கப்பலை நாங்கள் இப்போது பணயமாக பிடித்து வைத்திருப்பது போரில் நாங்கள் எங்களை இணைத்துக் கொண்டதன் தீவிரத்தை உணர்த்தும். என்ன விலை கொடுத்தாவது கடல்பரப்பில் நாங்கள் இந்தப் போரை மேற்கொள்வோம். இது வெறும் ஆரம்பம்தான் என்று குறிப்பிட்டுள்ளார்.

இஸ்ரேல் பிரதமர் பெஞ்சமின் நெதன்யாகு அலுவலகம் இந்தச் சம்பவத்துக்குக் கண்டனம் தெரிவித்துள்ளது.

பிரதமர் அலுவலகத்தின் கண்டனக் குறிப்பில்,

ஹவுத்திக்கள் இஸ்ரேலிய பெரும் பணக்காரர் ஒருவருக்குச் சொந்தமான கப்பலை சிறைப்பிடித்துள்ளது. அதில் உள்ள 25 பேரில் ஒருவர் கூட இஸ்ரேலியர் அல்ல. பல்கேரியா, பிலிப்பைன்ஸ், மெக்சிகோ, உக்ரைன் எனப் பல்வேறு நாடுகளைச் சேர்ந்தவர்களாவர்.

பல நாடுகளைச் சேர்ந்தவர்கள் இருக்கும் கப்பலைக் கடத்தி ஏமன் மிகப் பெரிய சர்வதேச குற்றம் புரிந்ததோடு உலக நாடுகளின் கோபத்துக்கு ஆளாகியுள்ளது. இது ஈரானின் பயங்கரவாதத்தின் வெளிப்பாடு என்று கூறியுள்ளது.

இதற்கிடையில் பணயக் கைதிகளாகப் பிடிக்கப்பட்டவர்கள் இஸ்லாமிய சட்டத்திட்டங்களுக்கு உட்பட்டு நடத்தப்படுவதாக ஹவுத்தி குழு தெரிவித்துள்ளது.

தென்மேற்கு ஆசிய நாடான ஏமனில், சன்னி பிரிவைச் சேர்ந்த ஜனாதிபதி மன்சூர் ஹைதிக்கும், ஷியா பிரிவைச் சேர்ந்த ஹவுத்தி கிளர்ச்சிப் படைக்கும் இடையே கடந்த 2015 ஆம் ஆண்டு மார்ச் மாதம் முதல் உள்நாட்டுப் போர் நடைபெற்று வருகிறது.

இதில் ஜனாதிபதிக்கு ஆதரவாக சவுதி அரேபியா செயல்படுகிறது. ஹவுத்தி கிளர்ச்சிப் படைக்கு ஈரான் ஆதரவு அளிக்கிறது என்பது குறிப்பிடத்தக்கது.

# ஹமாஸின் பதுங்கிடமாகியுள்ள அல் ஷிபா மருத்துவமனை!

## – ஆதாரத்தை வெளியிட்டது இஸ்ரேல் இராணுவம்

மருத்துவமனைகளை ஹமாஸ் பதுங்கிடமாகவும், தாக்குதலுக்கு திட்டமிடும் இடமாகவும் பயன்படுத்துகிறது, அல் ஷிபா மருத்துவம்னைக்குக் கீழ் ஹமாஸ் சுரங்கம் இருக்கிறது என்று கூறிவந்த இஸ்ரேல் அதனை உறுதிப்படுத்துவதுபோல் சில ஆதாரங்களை வெளியிட்டுள்ளது.

காசா மருத்துவமனைகளில் 35 இற்கும் மேற்பட்ட சுரங்கங்களைக் கண்டுபிடித்துள்ளதாகவும் இஸ்ரேல் இராணுவம் தெரிவித்துள்ளது.

இந்த நிலையில், இஸ்ரேல் இராணுவம் சமூக வலைத்தளத்தில் ஒரு புகைப்படத்தைப் பகிர்ந்துள்ளது. இந்தப் புகைப்படம் ஒக்டோபர் 7 2023 அன்று அல் ஷிபா மருத்துவமனையில் புகைப்பட கருவியில் பதிவானது. காலை 10.42 மணி முதல் 11.01 மணிக்குள் சில பணயக் கைதிகளை ஹமாஸ் குழுவினர் அழைத்து வருகின்றனர். அதில் ஒருவர் நேபாளி, ஒருவர் தாய்லாந்து நாட்டைச் சேர்ந்தவர். இவர்களில் ஒருவர் காயமடைந்துள்ளார். அவரை




மருத்துவமனை படுக்கையில் சுமந்து செல்கின்றனர். மற்றொருவர் நடந்து வருகிறார்” என்று தெரிவித்துள்ளது.

இஸ்ரேல் – ஹமாஸ் போரில் இதுவரை உயிரிழந்தோரின் எண்ணிக்கை 13 ஆயிரத்தைக் கடந்துள்ளது. இஸ்ரேல் தரப்பில் 1200 பேரும், காசாவில் குழந்தைகள் உள்பட 12 ஆயிரத்து 300 இற்கும் அதிகமானோரும் உயிரிழந்துள்ளனர்.

இதேவேளை, இஸ்ரேல் இராணுவத்தின் கட்டுப்பாட்டில் வந்துள்ள காசாவின் மிகப் பெரிய மருத்துவமனையான அல் ஷிபா மருத்து வமனையில் சுகாதார சீர்கேடு ஏற்படும் அபாயம் நிலவுகிறது.






# மலையக மக்களின் பொருளாதார அபிவிருத்தித் திட்டம் நடைமுறையில்

**(ஏ.எச்.ஏ. ஹுஸைன்)**

மலையக சமூக மக்களின் ஆற்றல், மேம்பாடு, பொருளாதார விருத்தி, தகவல் தொடர்பாடல் திறன்கள் என்பனவற்றை அபிவிருத்தி செய்வதற்காக திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றன என்று சுவீடன் சர்வதேச அபிவிருத்திக்கான ஒத்துழைப்பு அமைப்பு நிறுவனத்தின் இலங்கைக்கான பணிப்பாளர் தேவசிகாமணி மயூரன் தெரிவித்தார்.



மலையகத்தில் அமுல்படுத்தப்படும் திட்டங்கள் சம்பந்தமான வருடாந்த மீளாய்வுக் கூட்டம் வார இறுதியில் நுவரெலியா கிறீன் சிற்றி விடுதியில் இடம்பெற்றது.

அங்கு நிகழ்வில், தகவல் தொடர்பாடல் பயிற்சி நிலையமும் பெருந்தோட்ட மனிதநேய அபிவிருத்தி வளநிலையமும் திறந்து வைக்கப்பட்டன.

2023 இல் தொடங்கப்பட்ட "தோட்டங்கள் மற்றும் கிராமங்களில் கூட்டுறவுகளின் கொள்ளளவு" என்ற ஆரம்ப ஐந்தாண்டு திட்டம், தோட்ட மற்றும் கிராமப்புற சமூகங்களின் சமூக மற்றும் பொருளாதார நல்வாழ்வை மேம்படுத்துவதில் கவனம் செலுத்துவதாக அங்கு தெரிவிக்கப்பட்டது.

2022 இல் தொடங்கப்பட்ட "உண்மையான மாற்றத்துக்கான குழந்தைத் தொழிலாளர் இல்லாத நிலைமையை உருவாக்குதல்" எனும் இரண்டு வருடத் திட்டம் ஆரம்பகால குழந்தை பருவ மேம்பாட்டு மையங்கள், பள்ளிகள் மற்றும் சமூகங்களில் உள்ள குழந்தைகளுக்கு பாதுகாப்பான சூழலை உருவாக்குவதை நோக்கமாகக் கொண்டது. சமூகம் சார்ந்த குழந்தை பாதுகாப்பு வழிமுறைகளை வலுப்படுத்தவும் இந்த திட்டங்கள் உதவியுள்ளன.

2014 ஆம் ஆண்டு தொடக்கம் பாம் அறக்கட்டளை நிறுவனம் சர்வதேச தன்னார்வ உதவு ஊக்க நிறுவனமான வீ எபெக்ற் நிறுவனத்தின் நிதி அனுசரணை ஊடாக மலையக கிராமப்புற சமூகங்களுக்கு நன்மை பயக்கும் இத்திட்டங்களை அமுலாக்கி வருகின்றது.

இந்த நிகழ்வுகளில் நுவரெலியா மாவட்ட மேலதிகச் செயலர் சுஜீவா போதிமான்ன, வலப்பனை பிரதேச செயலாளர் ஷாலிகா லிந்தகும்புர, பெருந்தோட்ட மனித அபிவிருத்தி அறக்கட்டளையின் தலைவர் பாரத் அருள்சாமி, அதன் பணிப்பாளர் லால் பெரேரா, நுவரெலியா மாவட்ட சுகாதாரப் பணிப்பாளர் டாக்டர் சரத் அமுனுகம உட்பட பிரதேச செயலக அதிகாரிகள், பிராந்திய பணிப்பாளர்கள், வலய அதிகாரிகள், பாடசாலைகளின் அதிபர்கள், நுவரெலியா மாவட்ட பொது வைத்தியசாலையின் பணிப்பாளர் டாக்டர் மகேந்திர செனவிரத்ன, சுகாதார நிபுணர்கள் தாதியர்கள், கல்வித் துறையின் பிரதிநிதிகள் ஆகியோரும் கலந்து கொண்டனர்.

# முதியோருக்கு அடிப்படை வசதி

**(எஸ்.கீதபொன்கலன்)**

மூதூர் பிரதேச செயலகத்தால் 60 வயதுக்கு மேற்பட்ட முதியோர்களின் அடிப்படை வசதிகளை மேம்படுத்தும் நோக்கில் பத்து முதியோர்களுக்கு கட்டில், மெத்தைகள் பிரதேச செயலரால் வழங்கி வைக்கப்பட்டன.



இந்நிகழ்வுக்கு தேசிய முதியோர் செயலகம் அனுசரணை வழங்கியிருந்தது.




# உலகக் கிண்ண கனவு அணி

உலகக் கிண்ணக் கிரிக்கெட் தொடர் முடிந்த கையோடு, சர்வதேச கிரிக்கெட் சபை (ஐ.சி.சி.) உலகக் கிண்ணத் தொடரின் கனவு அணியை அறிவித்துள்ளது.

இந்தியாவில் நடைபெற்று வந்த உலகக் கிண்ணக் கிரிக்கெட் தொடர் நேற்று (19) முடிவடைந்தது. இதில் அவுஸ்திரேலியா சம்பியன் பட்டத்தை வென்றது.

இந்நிலையில் இந்தத் தொடரில் சிறப்பாக விளையாடிய வீரர்களை அடிப்படையாகக் கொண்டு உலகக் கிண்ணத்துக்கான கனவு அணியை ஐ.சி.சி. அறிவித்துள்ளது.

அந்த அணிக்கு இந்திய அணித் தலைவர் ரோஹித் சர்மாவே அணித் தலைவராக்கப்பட்டுள்ளார்.

இதில் இந்திய வீரர்கள் அறுவர் இடம்பிடித்துள்ளனர். இலங்கை வீரர் ஒருவரும் இடம்பிடித்துள்ளார்.

உலகக் கிண்ணத் தொடருக்கான கனவு அணி வருமாறு –

1. ரோஹித் சர்மா (அணித்தலைவர் – இந்தியா)
2. விராட் கோஹ்லி (இந்தியா)
3. கே.எல். ராகுல் (இந்தியா)
4. ரவீந்திர ஜடேஜா (இந்தியா)
5. முகமது ஷமி ( இந்தியா)
6. பும்ரா ( இந்தியா )
7. டி கொக் (தென்னாபிரிக்கா)
8. டேரில் மிட்செல் (நியூஸிலாந்து)
9. கிளென் மக்ஸ்வெல் (அவுஸ்திரேலியா)
10. டில்ஷான் மதுஷன்க (இலங்கை)
11. அடம் ஜம்பா (அவுஸ்திரேலியா)
12. ஜெரால்ட் கோட்ஸி ( தென்னாபிரிக்கா)

இந்த அணியில், பாகிஸ்தான், இங்கிலாந்து, ஆப்கானிஸ்தான், பங்களாதேஷ் மற்றும் நெதர்லாந்து அணிகளின் வீரர்கள் எவரும் இடம் பெறவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

